மில்க் வைற்
நீல சோப்
மேல் உறைகளைச் சேகரியுங்கள்
வழமைபோல் 50 மேல்உறைகளுக்கு ஒரு அழகான சாக்குப்பை இனமாக கொடுக்கப்படும்.

★★ Registerd as a Newspaper in Ceylon விலைசதம் 20

# ஈழநாடு

THE EELA NADU
தேசீய தினசரி National Tamil Daily
மலர் 8 (27-4-66) இதழ் 79
பராபவ சித்திரை 14 முஹர்ரம் பிறை 5 புதன்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

இந்திய — பாகிஸ்தான் சண்டை

# அமெரிக்கா மீது குற்றச்சாட்டு

## பாகிஸ்தானுக்கு அளிக்கப்பட்ட இராணுவ உதவியே காரணமாம்

வாஷிங்டன் ஏப்ரல் 26

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் பிற்பகுதியில் ஏற்பட்ட இந்திய-பாகிஸ்தான் சண்டைக்கு அமெரிக்காவின் இராணுவ உதவிதான் காரணம் என்று அமெரிக்க பேராசிரியர் திரு-கால்பிரைத் நேற்று இங்கு நடைபெற்ற அமெரிக்க செனட் வெளியுறவுக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அபிவிருத்தியடையும்நாடுகளுக்கு இராணுவ உதவிகள் அளிப்பதைஅமெரிக்கா நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கோரினர்.

பேராசியர் திரு. கால்பிரைத் முன்னர் இந்தியாவில் அமெரிக்கத் தூதுவராக இருந்தார்.

திரு. கால்பிரைத்மேலும் தெரிவிக்கையில், பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட இராணுவ உதவியினல்தான் இந்தியாவுடன் காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் மோதிக் கொள்ள நேர்ந்ததென்று கூறினர்.

கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்காகவே அமெரிக்கா இராணுவ உதவிகள் வழங்கிவருகின்றது. ஆனல் இந்திய-பாகிஸ்தான் சண்டை தவிர்க்க முடியாததொன்ருகிவிட்டதென்றும் பேராசிரியர் கால்பிரைத் குறிப்பிட்டார்.

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன் சண்டையிடுவதற்கு பாகிஸ்தான் முன்வந்திருக்கமாட்டாது. ஆனல் அமெரிக்க இராணுவ உதவிகள்தான் பாகிஸ்தானை ஊக்குவித்திருக்கிறது என்றும் பேராசிரியர் கால்பிரைத் குறிப்பிட்டார்.

### டாஷ்கண்டில் பூமி அதிர்ச்சி

மாஸ்கோ, ஏப். 26

டாஷ்கண்டில் இன்று ஏற்பட்ட பூமி அதிர்ச்சி காரணமாக 4 பேர் உயிரிழந்தனர். சுமார் 150பேர்காயமுற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், தனியார் கட்டடங்கள் பல பலத்த சேதமுற்றன.

பிரதமர் கோஸிஜின் சேதமுற்ற பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

### சம்பள நிர்ணய சபை

கொழும்பு, செவ்வாய்

விஸ்கோத்து மற்றும் மிட்டாய்கள் தயாரிப்பு நிலையங்களில் வேலைபார்க்கும் ஊழியர்களுக்கென விரைவில் சம்பள நிர்ணயசபை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

## சுவீடிஷ் மொழியில் திருக்குறள் மொழி பெயர்க்கப்படும்

### சுவீடிஷ் பேராசிரியர் அறிவிப்பு

கொழும்பு, செவ்வாய்,

'தமிழ்த்தாய்க்கு ஒவ்வொரு தமிழனும் தனது பணியைச்செய்யவேண்டும். தமிழுக்காக வாழவேண்டும்.'

இவ்வாறு சுவீடன் உற்சலா சர்வகலாசாலைப்பேராசிரியர் வண. வை. திரைக்கோம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் இன்று மாலை உரை நிகழ்த்துகையில் கூறினர்.

கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது தமிழில் பேசுகையிலேயே பேராசிரியர் வண. திரைக்கோம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நான்சிறுபிள்ளையாகஇருக்கும்போதே எனக்கு தமிழில் ஆர்வம் பிறந்தது. இந்த ஆர்வம் பின்னர் தமிழை ஆய்ந்தறிய ஊக்குவித்தது. தமிழ் பல நாடுகளில் பரந்து கிடக்கிறது.

திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருக்குறளை சுவீடிஷ் மொழியில் மொழிபெயர்க்க நான் இட்போது முயற்சிமேற் கொண்டுவருகின்றேன். தமிழின் சிறப்பு இப்போது உலகின் பல பாகங்களிலும் பரவிவருகிறது. தமிழை வளர்க்க தமிழர்கள் மேலும் முயற்சிக்கவேண்டும்.

வண. திரைக்கோம் உரையின் ஆரம்பத்தில் ''செந்தமிழ் நாடெனும் போதினிலே ஒரு தேன் வந்து பாயுது காதினிலே'' எனக் கூறி ஆரம்பித்தார்.

கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர் கார்ல் மெண்டீஸ், எடின்பேர்க் பல்கலைக்கழக பேராசிரியர் றன் அசர். பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையைச் சேர்ந்த திருமதி கவர் ஆகியோர் வரவேற்பளிக்கப்பட்ட மற்ற அறிஞர்கள். இவ்வைபவத்துக்கு திரு. மு. வைரவப்பிள்ளை தலைமை தாங்கினர்.

உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. சி. பாலசிங்கத்தின் அழைப்பின்பேரிலேயே இந்த அறிஞர்கள் இங்குவந்தார்கள்.

## "இசைக் கலைஞர்களுக்கு தனிச்சங்கம் அவசியம்"

யாழ்ப்பாணம், புதன்

''விவாதங்கள், தீர்மானங்கள் இயற்றப்பட்டுஅரசாங்கத்துக்கு ஒற்றுமையாக ஒரே குரலில் உரிமைகள் கேட்கப்பட்டால் அவை கவனிக்கப்பட்டு ஆவன செய்யக்கூடியதாயிருக்கும். ஈழத்தில் இசையாசிரியர்கள் செய்து வந்த தொண்டினல் எமது குழந்தைகள் தேவார திருவாசகம் முதலானவற்றை அழகாகப் பாடுகிருர்கள்'' என்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும் புத்தூக்க வகுப்புக்குத் தலைமை தாங்கிப்பேசுகையில் யாழ். மாவட்ட காரியாதிகாரி திரு. சிவஞானம் குறிப்பிட்டார்.

முத்தமிழ்மணி மணிபாகவதர் பேசும்பொழுது; ஒரு இசையாசிரியன் ஆயிரம் மக்களுக்குச் சமமானவன். இசையெனில் இசைவது-இசைவிப்பது. இசையென்ருல் இறைவன். இறைவனென்ருல் இசை என்றுகூறினர்.

இசைப்புலவர் ந. ஷண்மிகரத்தினம் ஈழத்தின் இசைவளர்ச்சிபற்றி விளக்கமாகக் கூறினர்.

## "கள்ள நாணயங்களை தயாரிக்கும் அச்சுக்களை கைப்பற்றினேன்"

### பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

மாவிட்டபுரம், செவ்.

''தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து நான் ஒரு வீட்டுக்குச்சென்ற பொழுது அங்கு கள்ள நாணயங்களைத் தாயாரிக்க உதவும் அச்சுக்களை கண்டேன். அவற்றுடன் மற்றும் பல உபகரணங்களையும் நான் அங்கு கைப்பற்றினேன்''

கள்ளநாணயம் என்றுஅறிந்தும் அவற்றை வைத்திருந்ததாகவும் கள்ள நாணயத்தைச் செய்வதற்குரிய உபகரணங்களை வைத்திருந்ததாகவும் அச்சுவேலியைச் சேர்ந்த திரு. எஸ். குணரத்தினம் என்பவர்மீது குற்றஞ்சாட்டி மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. ஜி. எப். எச். அத்துறுப்பாரு முன்னிலையில் காங்கேசன்துறைப் பொலிஸ்பகுதியில் முன்னர் கடமையாற்றிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் போல் சாட்சியமளிக்கையில் கூறினர்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''நான் அச்சுவேலி கிராமசேவையாளருடன் வல்லிபுரம் செல்வராசா என்பவர் வீட்டிற்கு சென்றேன். அங்கு சென்றபொழுது

(4-ம் பக்கம் பார்க்க)



அண்மையில் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் [illegible] யில் நடைபெற்ற சர்வசமய காங்கிரஸின் இரண்டாவது மகாநாட்டில் பல மதத்தலைவர்களும் கலந்துகொண்டிருப்பதை இங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

திருமுருகனும் திருமாலும் கருணை மிக்கவர்கள். தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்புற்றால் தூயவராகி மேலைத் தொல்கதியடைவர். செய்த குற்றங்களை எல்லாம் மன்னித்துவிடுவார். அதே போல் தம்மை அண்டிய யாருக்கும் வேண்டியதெதையும் கொடுப்பபார் கருணைக்கடலான கண்ணனும்.

— திருமுருக கிருபானந்தவாரியார்.


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 227

பராபவ ஆண்டு சித்திரை மீ 14 (27-4-66)


## திருமுருகனும் திருமாலும்

கண்ணனைவிட திருமுருகனே சிறந்த தெய்வம் என்று பொருள்பட தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஒரு கும்பாபிஷேக மலர் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதை சமயமஞ்சரி ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரன் ஆட்சேபித்துக் கடிதமொன்று எழுதியுள்ளார்.

"திருமுருகன் சேனைத் தலைவன். போர்க்களங் கண்டவன். பகைவென்றவன். அவனது போராட்டம் ஆதிக்கப் போராட்டமா? இல்லை. நீதிப் போராட்டம். நன்மையும் நீதியும் நிலைபெறப் போராடியவன். கண்ணனைப் போல நன்மைக்கும் தீமைக்கும் சமமாக நடந்து கொள்ள வில்லை. பாண்டவர் யுத்தத்தில் கண்ணன் உறுதியாக நியாயத்தின் பக்கத்திலேயே நிற்கவில்லை. அநீதியின் பிரதிநிதிகளாகிய துரியோதனதியருக்கும் படைகொடுத்து உதவினன். பாண்டவர் பக்கத்தில்தான் நின்றான். ஆனால் திருமுருகனோ தீமையை ஒட்ட ஒதுக்கினன். ஒழித்தான்..." என்று அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

சமயமஞ்சரி ஆசிரியர் இதற்கு அளித்துள்ள பதிலில், 'தெய்வத்தின் குணாதிசயங்களை விபரிக்கும தேவாரம் முதலாய தோத்திரங்கள். 'வேண்டுவார் வேண்டிடுவதே ஈவான்கண்டாய்' என்று வற்புறுத்திப் பாடுகின்றன. கிருஷ்ணபரமாத்மா கோடிக்கணக்கான இந்துக்களாலும் பிறராலும் போற்றித் துதிக்கப்படும் தெய்வம். பாரதப்போர் நடந்தே தீரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டபின் துரியோதனனும் அர்ச்சுனனும் அப்பெருமானிடம் வரங்கோரி துவாரகை சென்றனர். முந்தியவன் அவரது சேனையைக் கேட்டான். அந்த வரம் உடனே அளிக்கப்பட்டது. பிந்தியவன் பகவானின் அருள் ஒன்றே போதுமென்று நம்பி அதையே கேட்டான். அதுவும் அளிக்கப்பட்டது. 'நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில் நிற்கும் நடுவாகிய'' தெய்வம் இப்படிச் செய்ததில் தவறு கற்பிப்பது பலர் மனதையும் வீணுகப் புண்படுத்தும்'' என்ற முறையில் கண்டித்திருக்கின்றார்.

முன்காலத்தில் சைவ-வைணவ சச்சரவுகள் நடந்ததை இந்த வாக்குவாதம் நினைவுபடுத்துகின்றது. இந்து சமயத்துக்குள்ளாக, ஆஸ்திகர்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்று ஸ்ரீமத் காமகோடி சங்கராச்சாரியசுவாமிகள் போன்றவர்கள் ஆர்வம் கொண்டு திருப்பாவை- திருவெம்பாவை இயக்கத்தை நடத்திவருகையில், இவ்விரு இந்து தெய்வங்களுக்கிடையிலும்வேற்றுமை கற்பித்த மீண்டும் பிளவுகளை ஏற்படுத்துவதாயின் அது இக்காலத்தில் சற்றும் விரும்பத்தக்கதா? மேலும் சர்வசமய ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்பட வேண்டுமென்று மகாத்மாகாந்தி போன்றவர்கள் கவலை கொண்டு அதற்காகக் கூட்டுப் பிரார்த்தனை முதலியன நடத்துகையில், அடிகளார் போன்ற சீர்திருத்தவாதிகளும் அறிவாளிகளும் ஏன் இப்படி இந்து தெய்வங்களிடையே உயர்வு தாழ்வு கற்பிக்க வேண்டுமென்பது தெரியவில்லை.

"குமரனும் கோசலைக் குமரனும்'' என்று அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார்'' அவர்கள் எழுதியுள்ள ஒரு நூலில், ''மாமனும் மருகனும் ஒருவரே'' என்று குறிப்பிடுகின்றார். ''முருகனின் திருப்புகழைப் பாடி வந்த அருணகிரியார், ஒவ்வொரு பாடலிலும் முருகப் பெருமானைப் பற்றி மட்டுமன்றி, ராமர் கிருஷ்ணர் முதலிய அவதாரங்களின் பெருமைகளையும் குறிப்பிட்டிருக்கின்றார். சமரச சன்மார்க்கத்தைப் பின்பற்றும் பக்தர்களுக்கு அவ்வித திருப்புகழ் பாடல்கள் மிகப்பயனுள்ளதாக இருப்பதுடன், இவற்றை பக்தியுடன் தினசரி பாடுபவர்களுக்கு, திருமாலின் திருவருள் மட்டுமன்றி திருமால் மருகனான முருகப் பெருமான் அருளும் ஒருங்கே கிட்டும் என்பது திண்ணம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கால வாலிப உலகத்திலே தெய்வ நம்பிக்கைகள் குறைந்து, சமய வாழ்க்கையில் பலமான பற்றுக் கோடின்றி பல சீர்கேடுகள் ஏற்படுகின்றன. இச்சமயம் பல சமயங்களுக்கிடையிலும் பல தெய்வங்களுக்கிடையிலும் வேற்றுமைகளைக் கற்பிப்பது, அவ் வாலிபர்களுக்கு தெய்வ நம்பிக்கையை வலுப் படுத்த சற்றும் உதவாது, மனக் குழப்பத்தையே அதிகரிக்கும்.

''தெய்வம் ஒன்றே. பெயர்கள்தான் பலப்பல" என்ற உபநிடத வாக்குக்கிணங்க, சமயங்களிடையேயும் பொதுமையையும், ஒற்றுமையையும் வற்புறுத்த வேண்டியதே இக்காலத்துக்கு மிக அவசிய மாகும். இதன்படி திருமுருகனும் கண்ணனும் ஒன்றாகையால், இவர்களிடையே வேற்றுமையும், உயர்வு தாழ்வையும் கற்பிப்பது பயனுள்ள பணியாகாது.


தமிழ்ப்பண்டிதர்
## வ. மு. இரத்தினேஸ்வர ஐயரவர்களின்
84-ம் ஆண்டு தொடக்க நன்னாளில்
### கூறிய வாழ்த்துப்பா
(சுன்னாகம் கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை பி. ஏ. இயற்றியது)

எண்பத்து நான்கு எழில்பெறும் ஆண்டுகள்
மண்ணகம் வாழ்ந்துயர் மாண்புறத்-தண்டமிழ்த்
தொண்டுஞ் சமயநற் றொண்டும் புரியுமுன்
வண்மையை யாம் போற்று வம்


# மனிதனின் இருதயத்துக்கு பன்றியின் இருதயக்குழாய்

ஆக்ஸ்போர்ட், ஏப். 27

இருதய நோய்காரணமாக, துடியாய்த்துடித்துக் கொண்டிருந்த ஒருவர் காலனை வென்று இப்போது சுகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

56 வயதுள்ள பிரிட்டிஷ்பிரஜையொருவருக்கு ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை நடைபெற்றது. அவரது இதயக் குழாயில் பெரும்கோளாறு ஏற்பட்டிருந்தது அந்தக்குழாயை அகற்றுவதற்கு டாக்டர்கள் பெரும் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் மனித இருதயக் குழாய் கிடைக்கவில்லை, டாக்டர்கள் ஒரு நிமிட நேரம் யோசித்தனர், பன்றியின் இருதயக் குழாயைப் பொருத்துவதென்று முடிவுசெய்தனர்.

அந்த நோயாளியின் இருதயக்குழாயை அகற்றிவிட்டு டாக்டர்கள் ஒரு பன்றியின் இருதயக்குழாயை அவருக்குச் செலுத்தினர். பன்றியின் இருதயக்குழாய் தற்போது அவருடைய இருதயத்தில் இரத்தத்தை இறைத்துக் கொண்டும் செலுத்திக் கொண்டும் இருப்பதாக அறிவிக்கபபட்டது.

கருணையம்பதியில்

## வள்ளுவர் நினைவு விழா

### இருநாட்கள் நடைபெறும்

உடுப்பிட்டி, செவ்.

கருணையம்பதி கிராமமுன்னேற்றச்சங்கத்தின் 10-வது ஆண்டுதிருவள்ளுவர் நினைவு விழா எதிர்வரும் வைகாசித் திங்களில், கரணவாய் உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் 4, 5 ஆகிய திகதிகளில் இரண்டு நாட்கள்நடைபெறவிருக்கின்றது.

## மயிலிட்டி கிராமசபை இடைத் தேர்தல்

### மே 13-ல் நியமன பத்திரம் தாக்கல்!

யாழ்ப்பாணம், புதன்

மயிலிட்டி கிராமசபையின் 10-ம் வட்டார அங்கத்தவர் ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து அவ்வட்டார இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரம் மே மாதம் 13-ந் திகதி கிராமசபையில் ஏற்றுக்கொள்ளப்படுமென யாழ்ப்பாண உதவித் தேர்தல் அதிகாரி திரு. முருகேசு அறிவித்துள்ளார்.

## கட்டடம் வாங்கியது!

கொழும்பு, செவ்வாய்

பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனம் தனது தலைமைக் காரியாலயத்துக்கென பன்னிரண்டு லட்சம் ரூபா செலவில் ஒரு கட்டடத்தை வாங்கியுள்ளது. இக்கட்டடத்துக்கு கூட்டுஸ்தாபனம் மாதம் தோறும் [illegible] ரூபா வாடகை செலுத்தி வந்தது.

## "தையற்கலையில் முன்னேற வேண்டும்''

மாவிட்டபுரம், செவ்.

''நமது நாட்டிலுள்ள பெண்கள் தையற்கலையில் சிறிது குறைந்தவர்களாகவே இருக்கின்றனர். இதற்குப் போதிய பயிற்சி பெருதது தான் காரணமாகும் சிற்பக் கலைஞர் திரு. எஸ். சுப்பிரமணியம் இந்தியாவில் பயிற்சி பெற்றவர். அவர் இத்துறையில் நல்ல சேவையளிக்க முடியும் என்று எதிர்பார்க்கலாம்'' என்று அண்மையில் காங்கேசன்துறையில் தையற்கலை மன்றமொன்றை திறந்து வைத்து திரு. மு கந்தசாமி பேசுகையில் கூறினர்.

தலைமை ஆசிரியர் திரு வ. கிருஷ்ணபிள்ளை பாராட்டிப் பேசுகையில்; நமது நாட்டிலும் தையற்கலையை விருத்தி செய்ய அன்னரது சேவை பயன்படுமென்றும் இந்த வகையில் நாம் அதிர்ஷ்ட சாலிகளென்றும் விரைவில் இக்கலைமன்றத்தில் பரதநாட்டிய வகுப்புகளும் நடைபெறும் என்றும் கூறினா. திரு. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார்.

## மிகிர்சென் போக்கு

### வாலிப முன்னணி கண்டனம்

பருத்தித்துறை, செவ்.

ஈழத்து நீச்சல் வீரர்களாகிய நவரத்தினசாமி. ஆனந்தன் ஆகிய இருவரும் பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவில்லையென்று சொன்ன இந்திய நீச்சல் வீரர் மிகிர்சென்னின் கூற்றுக்கு கண்டனம் தெரிவித்து பருத்தித்துறை தமிழரசுவாலிப முன்னணி கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இந்திய நீச்சல் வீரரின் தற்பெருமை போக்கு இந்தத் தீர்மானத்தில் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது.

வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## தீராத மர்மம்!

கொழும்பு, செவ்.

தெதுறுஓயா கொலைவழக்கில் மற்றுமொரு திருப்பம் ஏற்பட்டுள்ளது.

காணமற்போன இளம் பெண்ணின் தலை, வெலிக்கடையில் புதைக்கப்பட்டிருக்கிறது என்று கோட்டை பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் கோஷ்டியொன்று அங்கு விரைந்துள்ளது.

## நாட்டிலும் நகரிலும்

பலே பண்டா! ஆணிவேரை இப்பொழுதுதான் கண்டுபிடித்திருக்கிறீர்! ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதென்ற உண்மை இப்பொழுதுதான் வெளிச்சமாகிறது கூடங்களிலிருந்து ஆராய்ச்சிகள் செய்து, அறிக்கைகளை வெளியிட்டு, சம்மேளனம் கூடி சர்ச்சை நடத்தி, அந்தர்கணக்கில் அறிவித்தல்களை வெளியிட்டதில் எள்ளளவேனும் பிரயோசனமில்லை என்பதையும், ஆராய்ச்சியின் பயனை அடையவேண்டிய விவசாயிகளின் செவிகளில் அவை நேரடியாகப் போய்ச்சேர வேண்டுமென்ற பேருண்மையையும் உணவுமந்திரியாகிய நீர்நேற்றுமுடிந்த அரிசி உற்பத்தி ஆராய்ச்சி மகாநாட்டில் விளங்கப்படுத்தினீர்.

மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இலங்கையைப் பீடித்துள்ள பிரச்னைகள் எல்லாவற்றிலும் மகாமுக்கியமான பிரச்னை இந்த அரிசிப் பிரச்னைதான். நமது வருமானத்தின் பெரும்பகுதியை வெளிநாட்டு அரிசி இறக்குமதிகள் விழுங்கிக் கொண்டேவருகின்றன. அரசாங்கங்களே இதையிட்டு, ஈடாட்டம் அடைகின்றன.

நமக்குத் தேவையான அரிசியை நாமே உற்பத்தி செய்யவேண்டுமென்ற எண்ணம் தாம் சுதந்திரமடைந்து கல்லோயா, மின்னேரி, கந்தளாய் முதலிய பெரும் விவசாயத்திட்டங்களையும் மகாஇலுப்பலம, பொலன்னறுவ, கரடியனுறு, அம்பவெல, வவுனியா, திருநெல்வேலி முதலிய இடங்களில் அமைக்கப்பெற்ற கமத்தொழில் ஆராய்ச்சி நிலையங்களையும் நிறுவியபோதே நமக்குத் தோன்றிவிட்டது.

நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பலவிதமான ஆராய்ச்சிகள் நடந்தன. ஜப்பானிய முறைப்படி நெல விளைவிப்பதற்காக அந்நாட்டிலிருந்து சில நிபுணர்களும் தருவிக்கப்பட்டனர். இருந்தும் எமது நெல் விளைச்சல் கணிசமான அளவு அதிகரிக்கவில்லை. இன்றைக்கும் நாம் உட்கொள்ளும் அரிசியில் கிட்டத்தட்ட அரைவாசியும் வெளிநாடுகளிலிருந்தே வருகிறது.

இதற்குக்காரணம் என்னவென்றால் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்படும் விஷயங்கள் அநேகமாக ஆராய்ச்சிக் கூடத்துக்குள்ளேயே இருந்துவிடுகின்றன. எவரிடம் போய்ச்சேரவேண்டுமோ அந்த விவசாயியிடம் அவை சேரவில்லை. விவசாய இலாகா அடிக்கொருதடவை துண்டுப்பிரசுரங்களை அச்சடித்து விநியோகம் செய்யும். அவை கமக்காரனின் கைக்கு எட்டினாலும் அவன் அவற்றை அவ்வளவாகக் கவனிப்பதில்லை.

அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் பெரிய பெரிய யந்திரங்களை வைத்து, செயற்கை உரங்களைப்போட்டு, பூச்சி மருந்துகளை அடித்து அதிசயிக்கும்படியான சாகுபடி செய்கிறார்கள் என்று அவனுக்குப்பிரசாரம் செய்தால் 'அங்கிருப்பவர்கள் அதிர்ஷ்டம் செய்தவர்கள்' என்று கூறிவிட்டு அவன் தன்பாட்டுக்குப் போய்விடுவான்.

ஆராய்ச்சி வேலைகள் விஞ்ஞான கூடத்திலிருந்து வயற்காட்டுக்கு வந்துசேரவேண்டும். விவசாய போதனாசிரியர்களும், நீர்ப்பாசன நிபுணர்களும், நிலப்பரிசோதகர்களும் கமக்காரரோடு சேர்ந்துவயலுக்குள் இறங்கி நிலத்தைப் பண்படுத்தும் முறை, விதைதெரிவு, பசளையிடுதல், பூச்சி கொல்லுதல், நீர்ப்பாசனம் ஆகியவற்றில் தாங்கள் நவீனமாகக்கண்டுபிடித்த உற்பத்திப்பெருக்க சூட்சுமங்களை செயல் முறையில் காண்பிக்கவேண்டும். இப்படிச்செய்தால் பத்து வருடங்களில் நெல் விளைச்சலில் தன்னிறைவு காண்போம் என்பது திண்ணம்.

— வழிப்போக்கன்

(4-ம் கலம் பார்க்க)

5-ம் கலத் தொடர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள், கண்டி ரோட்டில்' சங்கத்தானைப் பெரிய அரசடிச்சந்திக்கு அருகாமையில், 31/4 பரப்பு வீடு கட்டத்தகுந்த நிலம் விற்பனைக்கு உண்டு, A V. சரவணமுத்து, சாவகச்சேரி. 267

ஆனைக்கோட்டையில் ரோட்டு ஓரத்துடன் வீடுகட்டுவதற்கு உகந்த நிலம்ஐந்து தொடக்கம் பத்துப் பரப்பு வரை விற்பனைக்கு உண்டு. 14 ஏ, சாஸ்ஸ் டிறைவ், கொழும்பு-3. 235

CL சீரிஸ்மொரிஸ்மைனர் மிகவும் நல்ல நிலையில்சொந்தப் பாவிப்பிலுள்ளகார்விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். முகவரி- 18, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம், 273

E Y A 40 டெவன் நல்ல நிலையில் ரூபா 5750/- அல்லது அதற்கு நெருங்கிய விலைக்குண்டு. பார்வையிடல் சிறிமுருகன் ஸ்ரோஸ், கண்டி ரோட், வவனியா. 276

## தேவை

கீழ்க்காணும் சினிமாவுக்கு இரண்டு புக்கிங் கிளாக் தேவை. பிணைப்பணம்: 1000/- ருத்திரா சினிமா, திருகோணமலை. க.கோபால் உரிமையாளர், 277

நாவற்குழியில் எமது ஈழநாடு' பத்திரிகை விற்பனவு செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை. விபரங்கட்கு விநியோக மனேஜர், த. பெ. எண் 49யாழ்ப்பாணம்என்ற விலாசத்துடன் கடிதமூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும். 270

## இசை விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

யரழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் 15வது ஆண்டு இசைவிழா ஆரும்நாள் நிகழ்ச்சிகள்; 5-15 கிளாரிநெட், 6-45 பாட்டு, 8-00 தலைமையுரை: நல்லூர் எம்.பி. திரு. ஈ எம்.வி. நாகநாதன், 8-15 திரு. ராம் குமாரசுவாமி பாட்டு, 9-30 திரு. எஸ். பரம்தில்லைராஜா பாட்டு.

நாவற்குழி

## விளையாட்டுக் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

நாவற்குழி விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ்ப்பாணம் டியூட்டோரியல் கல்லூரி கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேக பூர்வமான கிரிக்கெட் போட்டியில், நாவற்குறி விளையாட்டுக்கழகம் ஒரு ஆட்டத்தினலும் ஒரு ஓட்டத்தாலும் வெற்றியீட்டியது.

முதலாவதாக துடுப்பெடுத்தாடிய டியூட்டோரியல் கல்லூரி வீரர்கள்சகல விக்கட்டுகளையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றனர். தில்லைநடராசா இதில் 5 விக்கட்டுகளை வீழ்த்தினர். அடுத்து துடுப்பெடுத்தாடிய நாவற்குழி விளையாட்டுக்கழகம் 75 ஓட்டங்களைப் பெற்றது. இராசசிங்கம் 39ஓட்டங்களை எடுத்தார். பின்பு டியூட்டோரியல் கல்லூரி31 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது, சம்பந்தன்பந்தெறிந்து ஆறு விக்கட்டுகளை பெற்றுர்,நாவற்குழி கழகத்தினரின் பந்து தடுப்பு முறையே கோஷ்டியின்வெற்றிக்கு மூலகாரணமாயிருந்தது குறிப்பிடத்தக்கது.

# விளம்பரம்

### முஸ்லிம் ஹோட்டலுக்கு ஆட்கள் தேவை

கமால் பிளவ்ஸ்,
65, காங்கேசன்துறைவீதி,
சுன்னுகம்.

65-ம் இலக்க காங்கேசன் துறை வீதி சுன்னுகத்தில் அமைந்துள்ள 'கமால் பிளவ்ஸ்' என்ற தேநீர் ஹோட்டலுக்கு முஸ்லிம் உணவுகள், சிற்றுண்டிகள் தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்த சமையற்காரன் ஒருவரும், சப்ளையர் ஒருவரும் தேவை. இதற்கு விண்ணப்பங்கள் அனுப்புவோர் மேற்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும். சம்பள விகிதம் நேரில்கண்டு பேசிக் கொள்ளலாம். 159

கிரிக்கெட்

## மின்னல்வென்றது

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தெற்கு சன சமூக நிலையத்தின் வருடாந்த விழவையொட்டி நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் சிவன், விளையாட்டுக் கழகமும் நல்லூர் தெற்கு மின்னல் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இப் போட்டி முடிவில் மின்னல் கோஷ்டி, சிவன் கோஷ்டியை 50 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி கனகரத்தினம் மத்திய வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

## முருகமூர்த்தி உற்சவம்

உடுப்பிட்டி, செவ்.

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 23-ம்திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவதினங்கள் ஒவ்வொன்றிலும் சைவப்பெரியார்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

நல்லூர்

## கைலாசவிநாயகர் உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோயில் உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. மே 3-ல் தேர்த் திருவிழா நடைபெறும்.

## திருத்தம்

கடந்த திங்கட்கிழமை ''ஈழநாடு'' பத்திரிகையில் ''லஞ்சம் வாங்கியதாக...'' என்றதலைப்பில் வெளியான செய்தியில்; முள்ளியவளை அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த அப்போதிக்கரி என்றிருப்பது தவருகும். ''புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலைக்குப் பொறுப்பாகவிருந்த அப்போதிக்கரி, கடந்த மாதம் இரண்டாம் திகதி கரயான் முள்ளி வாய்க்காலிலுள்ள அரசினர் வைத்தியசாலையில் மருந்து கொடுக்கும் பொழுது லஞ்சம் வாங்கியதாக...'' என்றிருக்கவேண்டும்.

### சங்கானைப் பட்டினசபைக்

## கேள்விப் பத்திரம்

மேற்படி பட்டினசபையால் புதிய கடை கட்டுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் மேற்படி சபைக் காரியாலயத்தில் 3-5-66 பகல் 12 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 50/- ரூபா கட்டியதன் பேரில் வழங்கப்படும். கேள்விப்பத்திர விலையாக ரூபா 5/-ம் கட்டி 2-5-66-ம் திகதி பகல் 12 மணிவரையும் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் சங்கானைப் பட்டினசபைக் காரியாலயத்தில் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. க. திருச்சிற்றம்பலம்,
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபைக்
காரியாலயம்,
சங்கானை,
25-4-66.

166

### யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவு

## பிரவேசம் மே 1966

1966-லும் 1967-லும் நடக்கும் சோதனைகளுக்குத் தயார் செய்யும் பொதுத் தராதரப்பத்திர உயர் நிலைப் பரீட்சை வகுப்புகளில் கலைத்துறைக்கும், விஞ்ஞானத்துறைக்கும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

விண்ணப்பப்பத்திரமும் தகவல் தொகுப்பு அறிக்கையும் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். விண்ணப்பிப்போர் தங்கள் விலாசமிட்ட, முத்திரை ஒட்டிய நீள உறைஅனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்.

வட்டுக்கோட்டை.

167

## நவஜீவனம் பரந்தன் 7-ம் நிறைவு விழா 29-4-66

நிகழ்ச்சி: காலை 7 மணிக்கு
ஸ்தோத்திர ஆராதனை

காலை 11 மணிக்கு
ஏ. வி யேசுதாசனின்
பிரதிட்கைஷ ஆராதனை

மாலை 6 மணிக்கு
பஜனை

செல்வி ஜீவா இராசரத்தினம்


மாலை 7-30 மணிக்கு
கதாப்பிரசங்கம்
அருள் திரு. ஐ. ரி. யேசுசகாயம் அடியார்.

அன்பர்கள் யாவரும் அழைக்கப்படுகின்றீர்கள்.

நவஜீவனம்.

28-4-66. 170


வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியமனம்

கொழும்பு, செவ்.

பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஜே. ஏ. எல். ஞேஸ் மெல் கொக் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நேற்று நியமிக்கப்பட்டார்.

## கடும்மழை

கொழும்பு, செவ்வாய்

வடமேற்கு மாகாணத்தில் கடும் மழை பெய்வதால் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். குருநாகலை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.


### விற்பனைக்கு

மொறிஸ்மைனர், EL தொடர்பிலக்கம். நல்லநிலையிலுள்ளது. கலனுக்கு 45 மைல் வேலைசெய்யும். விபரங்களுக்கு: 5, விக்டோறியா தெரு, யாழ்ப்பாணம். 272

REGAL—JAFFNA
NOW SHOWING!
MARCELLO MASTROIANNI
in
DIVORCE - ITALIAN STYLE
(Adults Only)

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45க்கு மட்டும்
எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி
கலரி 50 சதம்.

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
எங்கள் வீட்டுப்பிள்ளை


## ஜே.பி. க்குபாராட்டு

கோண்டாவில், செவ்.

அண்மையில் அரசாங்கத்தினால் ஜே.பி. பட்டம் அளித்து கௌரவிக்கப்பட்ட யாழ்ப்பாண சுருட்டு உற்பத்தியாளர் சங்க செயலாளரும், அரசாங்க சம்பள நிர்ணய சபை அங்கத்தவருமான சி. ஆ. த. வடிவேலுவிற்கு கோண்டாவில் இணுவில் பொதுமக்களால் வியாழக்கிழமையன்று பண்டிதர் நா. இராசையா தலைமையில் வரவேற்பொன்று அளிக்கப்படும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா உதவி அரசாங்க அதிபர் திரு ஜே. எம், சபாரத்தினம். உள்ளூராட்சி அமைச்சர் திரு எம். திருச்செல்வம் உட்பட பலர் பாராட்டுரை வழங்குவார்கள்.

அல்வாய்


## வள்ளுவர் கலைமன்ற புதுவருட நிர்வாகிகள்

வல்வெட்டித்துறை, செவ்.

அல்வாய் வள்ளுவர் கலைமன்றத்தின் பொதுக்கூட்டம் திரு. சு. கணபதிப்பிள்ளை தலைமையில் இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்: திரு. க. கந்தையா, தலைவர்: திரு. சு. கணபதிப்பிள்ளை, செயலாளர்: வே. தங்கராசா, உதவிச்செயலாளர்: பொ. அரியரத்தினம், பொருளாளர்: த. கணேசானந்தன், உதவிபொருளாளர்: க. கதிர்காமத்தம்பி. மற்றும் செயற்குழு அங்கத்தவர்களாக எண்மர் தெரிவு செய்யப்பட்டனர்.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி




## யாழ்ப்பாணம் விஜயம்செய்யும் திரையுலக தாரகைகள்

''தமிழ் திரையுலக தாரகைகள்'' எஸ். எஸ். ஆர்- விஜயகுமாரி தம்பதிகள் இம்மாதம் 30-ந் தேதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர்.

கலைஞர் கருணாநிதியின் 'பராசக்தி' மூலம் தமிழ்த் திரையுலகில் புகுந்து, பீம் சிங்கின் 'பச்சை விள'க்கில் பட்டிக்காட்டானாகத் தோன்றி, தென்னிந்திய திரையுலகில் தனக்கென்றோர் தனியிடத்தைப் பிடித்துக்கொண்டுவிட்ட அண்ணாதுரையின் தம்பிகளில் ஒருவரான 'இலட்சிய நடிகர்' எஸ். எஸ். ராஜேந்திரனையும், நடிகை கண்ணாம்பாளுக்கு பிறகு 'கணீரென வசனம்பேச, நானிருக்கிறேன், என்று 'பூம்புகார்' மூலம் நிரூபித்துக்காட்டிய அவர் தம்மனைவியார் 'இலட்சிய நடிகை'யும் இங்கு முதற் தடவையாக வந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்வது யாழ்ப்பாணத்து ரசிகர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியை அளிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## கள்ளநாணயங்கள்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிஸ்கந்தராஜா என்பவர் இருந்து கொண்டு ஏதோ தயாரித்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். என்னைக் கண்டதும் ஒரு பொருளை பாய் ஒன்றின்கீழ் ஒளித்தார். பாயின்கீழ் நான்பார்த்தபொழுது 1963-ம் ஆண்டு என்று பொறிக்கப்பட்டஒரு 50சத நாணயத்தைக் கண்டேன். பின்னர் ஒரு பானைகரியையும், பைப்துண்டொன்றையும், சின்னஞ்சிறிய 9 லோக வகைகளையும், இரண்டு இரும்பு சுத்தியல்களையும், வேறுபொருள்களையும் அங்கு கண்டெடுத்தேன். 25 50 சத நாணயங்களையும் 1 ரூபா நாணயத்தையும் தயாரிக்க உதவும் அச்சுக்களையும் நான் கைப்பற்றினேன். பின்னர் இவற்றை எடுத்துக் கொண்டு எதிரியையும், சிறிஸ்கந்தராஜாவையும் கூட்டிச்சென்று பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தேன். பின்னர் இவர்கள் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டு பொருட்கள் அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பப்பட்டன. இதன் பின்னர் சிறிஸ்கந்தராஜா விடுதலை செய்யப்பட்டிருந்தார்.''

வழக்குமே மாதம் 5-ந் திகதிவரை மீண்டும் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

காங்கேசன்துறைப்பொலிஸ்இன்ஸ்பெக்டர் இராசநாயகம் வழக்கை நடாத்தினார். எதிரிகள் தரப்பில் திரு கே.வி. எஸ். சண்முகநாதன் திரு ... அவர்களுடன் ஆஜரானார்.

## அ. இ. தலைமையாசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடி உயர்கலை மண்டபத்தில் திரு. ஆ. கணபதிப்பிள்ளை தலைமையில் ஆரம்பமாகியது.

தலைவர் தமது உரையில் தலைமையாசிரியர்களுக்குள்ள குறைபாடுகளையும் கஷ்டங்களையும் விளக்கிக் கூறினர்.

திரு. சி. சா. வேலுப்பிள்ளை திரு. சி. சுப்பிரமணியம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

தலைவர் தமது முடிவுரையில்; பள்ளிக்கூடங்களின் தரவீழ்ச்சிக்குக் காரணம் ஆசிரியரல்ல நிர்வாகிகள் தான் என்றும் தலைமையாசிரியர் உரிமைக்குமட்டுமல்ல கடமைக்காகவும் பாடுபட வேண்டும் என்றும் பிள்ளைகள் உதவியாசிரியர்கள் ஆகியோரின் நலனுக்காகவும் முன்னின்று உழைக்கவேண்டுமென்றும் கூறினர்.

உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. கணபதிப்பிள்ளை, உபதலைவர்கள்: யோ. சி. அழகரத்தினம், க. பஞ்சாட்சரம், திருமதி செ. கந்தையா, காரியதரிசி: சி. சா. வேலுப்பிள்ளை, உப காரியதரிசி: சி. சுப்பிரமணியம், தனதிகாரி: இ. செல்வராசா. எட்டுப்பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## கிணற்றில் விழுந்து மரணம்

சுழிபுரம், செவ்வாய்

மாதகல் யாதம்பையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை உமையாள் என்னும் 70 வயது நிரம்பிய மூதாட்டி மாதகல் வயல் கிணறு ஒன்றில் தண்ணீர் எடுக்க முயன்றபோது தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து மரணமானர்.

காலம் சென்றவர் நேற்று அதிகாலை, கிணற்றில் குளிக்க முயன்றதாகவும், தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து மரணமானதாகவும் மரணவிசாரணையின் போது சாட்சியமளித்தவர்கள்தெரிவித்தனர். மரணவிசாரணை அதிகாரி தவறுதலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு அளித்தார்.

## பட்டின சபையின் தீர்மானங்கள்

மாவிட்டபுரம், செவ்வாய்

காங்கேசன்துறைப்பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்றபோது சபையின் கடந்தகாலங்களில் நகரபிதாக்களாகக் கடமையாற்றியவர்களின் உருவப் படங்களை சபை மண்டபத்தில் திரை நீக்கம் செய்து வைத்துக்கௌரவிப்பது என தலைவரால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாகத் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் குழாய் நீர்த் திட்டம் அமுலுக்கு வரும்வரையில் ஒரு தற்காலிக திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம் செய்வதெனவும், இதன்மூலம் இருவருக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதெனவும், இயக்கக் கூடிய ஓர் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தை இணைப்பதெனவும் 1000 கலன் கொள்ளக்கூடிய ஒரு தொட்டியினை அமைத்து நீரினை நாள்தோறும் நிரப்பி சபை முன்றலில்மட்டும் நீர்க்குழாயினை இணைத்து அதன்மூலம் அனைவரும் சபை அலுவலகத்தில் பிரவேசியாது தண்ணீர் எடுப்பதற்கு பட்டின சபை வளவிற்கு ஓர் பூந்தோட்டத்தினை அமைப்பதெனவும் தலைவரால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## டாக்டர்கள்-வழக்கறிஞர்கள் கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

டாக்டர்களுக்கும் வழக்கறிஞர்களுக்குமிடையேயான வருடாந்த கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இக்கிரிக்கெட் போட்டி இன்று புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிவரை நடைபெறும்.

மாலை ஆறரை மணிக்கு பரிசளிப்பு வைபவம் இடம்பெறும்.

## மந்திரிக்கு வைத்திய பரிசோதனை

கொழும்பு, செவ்.

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை வைத்திய பரிசோதனைக்காக ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


கைக்கடிகாரம், மணிக்கூடு, வானொலிகள்
திருத்துவதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள்
சௌித் உவார் கம்பெனி
சகலவிதமான கைக்கடிகாரங்கள், மணிக்கூடு ஆகியவற்றின்
உதிரிப்பாகங்களின் நேரடி - இறக்குமதியாளர்கள்
கைக்கடிகாரங்களுக்கான சகலவித டயல்களும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
56, கஸ்தூரியார் வீதி, :: :: யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி ... இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு வார மலர்

## துறப்பாய் இவனை, தூரப் பறப்பாய்!

— ''அல்லையூர் நயங்கொண்டார்'' —

இந்தத் தெருவில் இருமூன்று திங்களின்முன்
வந்த இவனை வரவேற்று - அந்தப்
புதுவீட்டை நீகாட்டும் போதறியேன் 'தாயே'
எதுவரைக்கும் போகுமிது என்று.

வேலைஎனக் கில்லை; இது வேதனைதான்: ஆயின்இதை
நாலுபேர் போயறிந்தால் நாணமலோ-கோலமயில்
அன்னாரைக் கூட்டி 'அநுதாபங்' கூறுவதேன்?
என்னாவி போகு திதில்!

பையில் பணந்தங்கிப் பன்னாட்டான்; ஆயினிவன்
கையில் திருவோடு கண்டவன் யார்-''மையேதும்
வேண்டுமெனிற் கேளுங்கோ; வெட்கமெதற்''
கென்றவளே

ஆண்டியிடங் கூறங்கதை!

பேனாவைத் தூக்கிப் பிடித்தால் அடுத்தகணம்
தானாய்த் தவழும் தமிழ்ப்பாடல்-ஆனால் நீ
''ஆய கவிதை அறுபத்தினான்குமிவள்
சாயல்'' எனச் சொன்னாய்; சரி!

வார இதழில் வருமென் கவிதைகளை
ஊர்முழுதுந் தானே உவக்கிறது!-நாரீ! நீ
பண்ணைக் குழைத்துப் பகலிரவாய்ப் பாடுவதேன்
கண்ணைக் குழையேன் கவனி!

ஏதோ, 'ரசிகை' எனப்பே சிருவார்த்தை
தீதாய் வருதல் தெரியேன்முன்-மாதே!
துறப்பாய் உனது துடிப்புகளை; தூரப்
பறப்பாய் விழையேன் பதில்!

# காகத்துக்கு சோறிடுவது ஏன்?

— க. வை. ஆ. சர்மா —

கிளி ஓர் அழகான பறவை; பேசப்பழக்கினால் பேசும். அதனால், சிலர் கிளியைக் கூட்டில் அடைத்து வளர்ப்பர். அப்படிச் செய்தல் பாவம் என்று கருதுபவரும் உண்டு. காகத்தை விரும்பி வளர்ப்பவர் எவரும் இல்லை. அது உண்ணாத உணவுப்பொருள் இல்லை -ஏன், மலத்தையும் விரும்பி உண்ணும். எத்துக் குணம் உடையது. ''எத்தித்திருடும் அந்தக் காக்காய்'' என்று பாரதியாரும் பாடியிருக்கிறார். உணவுப் பண்டங்களை வெய்யிலில் உலர்த்துபவர் காக்கையைக் கடிந்து துரத்துவர். ஆனாலும், சைவசமயிகள், தெய்வ நம்பிக்கை உடையவர்கள். காகத்தை விரும்பி அழைத்து உணவு கொடுத்து மகிழும் வழக்கமும் உடையவர்கள். அது ஏன் என்பதே இங்கு ஆராயப் புகுந்த விஷயமாம்.

நளச்சக்கரவர்த்தி புஷ்கரனோடு சூதாடி நாடுநகரெல்லாம் இழந்து அரியணையை விட்டு இறங்கிச் செல்லுகின்றான். புஷ்கரன் அந்த அரியணையில் அமருகின்றான். இதனை உவமையால் விளக்க வந்த புகழேந்திப்புலவர் —

''மென்கால் சிறையன்னம்
வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான்
போனாற்போல்'' —

காகத்தைப் புல்லிய காகம் எனக்கூறிப் புஷ்கரனுக்கு உவமிக்கிறார். ஆனாலும் காகத்தினிடமிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய ஐந்து சிறந்த பண்புகள் உள்ளன:-

''காலை எழுந்திருத்தல்
காணாமலே புணர்தல்
மாலை குளித்து
மனைபுகுதல்-சால
உற்றாரோ டுண்டல்
உறவாடல் இவ்வைந்தும்
கற்றாயோ
காக்கைக்குணம்,'

என்பது அறிஞர் வாக்கு. காலந்தவறாமல் அதிகாலையில் நித்திரைவிட்டெழுதலை நியதியாகக் கொண்டுள்ளது காக்கை இனம். ஆனால், மனிதஇனம் அதனை இன்னும் முற்றாகக் கற்றுக்கொள்ளவில்லை. சாதாரணமாக ஆண், பெண் வேறுபாட்டைக் காக்கையினத்தில் அறிதலே அரிது. அவற்றின் புணர்ச்சியை எவரும் காண முடியாது. எவராவது எங்காவது அப்படிக்காணநேர்ந்தால் அப்படிக் கண்டவரது ஆயுள் குறுகியது எனப்பெரியோர் சொல்லுவர். உணவு தேடச்சென்ற காகம் மாலை மீண்டுவரும்போது, எங்காவது நீர் நிலையில் புகுந்து குளித்த பின்புதான் தனது கூட்டை அடையுமாம். வெளியேபோய் வீடு திரும்பும் இக்கால மனிதருள் எத்தனை பேர் தமது காலைத் தானும் கழுவிய பின்பே தமது வீட்டினுள் புகும்வழக்கம் உடையர் என்பதை ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்ளவேண்டும். எந்த அற்ப உணவைக்கண்டாலும் ''கா! கா!'' என்று கரைந்து தம்மினத்தை அழைத்துப் பங்கிட்டு உண்ணும் வழக்கமுடையது காகம். இந்த அடிப்படையிலேதான் ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் ஒரு சிறந்த மனிதப் பண்பு'' எனப் பெரியோர் கூறுவர். அதாவது -ஒருவன் தான் தேடிய உணவைத் தான் மாத்திரம் உண்ணாமல் இயன்ற வரையும் அதனைப் பங்கிட்டுக்கொடுத்து உண்பதேயாம்.

''பாத்தூண் மரீஇ
யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டலரிது''

என இக்கருத்தையே திருவள்ளுவரும் வலியுறுத்துகிறார். ஐந்தாவதுஉறவாடல். எங்காவது ஒரு காகம் அவலமாய் விழுந்து கிடப்பதைப் பிறிதொரு காகம் காணநேருமாயின், விழுந்தகாகம் தனக்குச் சொந்தமா அல்லவா என்று, கண்ட காகம் சிந்திப்பதில்லை. அது அவ்விடத்தை விட்டுப்போகாது. சுற்றிச் சுற்றிப்பறந்து தன்னினத்தைக் கூவி அழைக்

(VIII-ம் பக்கம் பார்க்க)

## சட்டம்பியார் வருகிறார் — 5

# குணரத்தினம் 'மாஸ்டர்'



வி. என். பி.

மாணவர்களாகிய நாங்கள் எங்களுக்கு கல்வி புகட்டிய குருமாரை அவர்களுடைய குணம், நடத்தை, விருப்பு, வெறுப்புகளைப் பொறுத்து வெவ்வேறு அடைமொழிகள் சேர்த்து குறிப்பிட்டுக்கொள்ளுதல் வழக்கம். தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் படிப்பித்தவர்கள் எல்லோருமே எங்களுக்கு 'சட்டம்பியார்'கள். சட்டத்தை வகுத்து, அதை நிறைவேற்றுகிறவர் சட்டம்பியார். எமக்கும் முற்காலத்தில் அவர்கள் 'சட்டாம் பிள்ளை' என்றும் குறிக்கப்பட்டார்கள் சட்டம்பியார் பிள்ளைகளை எக்கச் சக்கமாக அடித்து 'சிறு காயம்' விளைவித்த குற்றத்துக்கு ஆளாகும்போது, சீற்றமுறும் பெற்றோர்களின் வாயில் அவர் 'யார்' என்ற மரியாதை விகுதி களையப்பட்ட வெறும் 'சட்டம்பி' ஆகிவிடுவார்.

மாணவர்களோடு அதிகம் பொருதி முட்டிக்கொள்ளாமல் தானும் தன் வேலையுமாகத் திரியும் அப்பாவி ஆசிரியரை நாங்கள் 'வாத்தியார்' (உபாத்தியாயர்) என்று கிட்டத்தட்ட எங்களோடு சமானமாகக் கருதி, ஆனால் மரியாதையோடும் அன்போடும் அழைப்போம். மாணவ குலத்தின் முதுகுகள் ஆசிரிய குலத்தின் கரங்கள் பதம்பார்ப்பதற்காகவே படைக்கப்பட்டன என்ற எண்ணத்துடன் முரட்டுத்தனமாகவும் வெகுளித்தனமாகவும் நடந்துகொள்ளும் ஆசிரியருக்கு அடைமொழியே கிடையாது. அவர் வெறும் ''இன்னார்'' தான். கந்தையர், முருகேசர், பொன்னம்பலத்

(VIII-ம் பக்கம் பார்க்க)

# இலக்கியத்தில் "கையறுநிலை"ப் பாடல்கள்

— செ. நடராசா —

மக்களினந் தோன்றிய நாளிலிருந்தே தமக்குப் பிரியமானவர் இறந்துவிட்டால் அவர்களுக்காக அழுது அரற்றுவது அழியாத வழக்கமாகிவிட்டது. சங்க காலத்திலே இவ்வழக்கம் விருத்தியடைந்து அவ்வாறுஅழுது அரற்றுவதற்கு கையறு நிலை என ஒரு துறையுமமைத்துவிட்டனர்.

கையறு நிலையென்பது இறந்தவருக்காகத் தம்மால் ஒன்றுஞ் செய்ய இயலாத நிலையில் அவர்களுக்காக ஏங்கி மனங்கசிந்துருகுதல் எனப் பொருள்படும். எத்துணைக் கற்றவர்களாக இருந்தாலும், தமக்குகந்தவர் தம்மை விட்டு மறையும்போது மனத்திலே தோன்றுகின்ற உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே, சங்க காலத்தில் 'கையறு நிலை' எனப் பெயர் பெற்ற இரங்கல் இக்காலத்திலே சரமகவி எனவும் இரங்கற்பா எனவும் மருவி வழங்குகின்றது.

இறந்தவர் அரசனாகவோ அன்றேல் மதிப்பிற்குரிய வள்ளலாகவோ இருந்தால் இவர்கள்மேற் பிரீதிகொண்டவர்கள் 'கையறு நிலை' பாடுவதும், வீரப்போர் புரிந்து, புகழுடம்பு பெற்ற போர் வீரனுக்கு, அம்மறவனது பெருவீரம்அமரத்துவம் பெறும்படி அவனது நினைவாக அவ்வீரனது பெயரையும் பெருமையையும் பொறித்து மயிற்பீலி சூட்டி நடுகல் நடுவதும்; அந்நடுகலிடத்து அவன் பிடித்த வேலை நட்டு கேடகத்தை அதனிடத்தே சார்த்திவைத்தலும் பண்டைய பெருவழக்காகும்.

இதனை அகநானூறு,

'பெயரும் பீடும்மெழுதி
யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை
நடுகல்
வேலூன்று பலகை வேற்று
முனை கடுக்கும்'
(அக. 131)

எனத் தெரிவிக்கிறது. இப்பாடல் மதுரை மருதனிள நாகனார் என்ற புலவராற் பாடப்பட்டதாகும்.

'கையறு நிலை' பற்றிய செய்திகளும் பாடல்களும் தமிழ் மக்களது வீரவாழ்க்கையைக் கூறும் புறநானூற்றில் அதிகமாகக் கூறப்பட்டுள்ளதாயினும் கலம்பக நூல்களிலும் வேறு பல இலக்கியங்களிலும் இக்கையறு நிலைப்பாடல்களில்லாமலில்லை. ஔவையாரென்னும் புலமை அதியமான் நெடுமனஞ்சி போர்க்களத்தில் பட்டபோது துயரந்தாங்காது அரற்றிய மொழிகள் கல்நெஞ்சையும் கரைப்பன.

'சிறிய அளவு மதுப் பெற்றால் அதை எனக்கு அளித்துவிடுவான்; பெரிய அளவு பெற்றால் யாம் பாட எமக்கும் அளித்துத் தானும் உண்பான்; சிறு சோறு எனினும் பலரொடு உண்பான்; பெருஞ் சோறு எனின் மிகப் பல றொடு உண்பான்;——நரந்தம் நாறுந் தன்கையால் புலால் நாறும்' என் தலையிலே அன்போடு தடவி மகிழ்வான். அவனோ பட்டனன்? எமக்குத் தந்தையாகி விளங்கி எம்மை அருளியவன் எங்கே? பாடும் புலமை மிக்கவர்களுக்கு வாரிவழங்க இனியாரிருக்கிறார்கள்? என்ற பொருளில்,

'சிறியகள் பெறினே
எம்மக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத்தான் மகிழ்ந்து
உண்ணுமன்னே
சிறு சோற்றானும் நனி பல
கலத்தன்மன்னே
பெருஞ்சோற்றானும் நனிபல
கலத்தன் மன்னே
..................
நரந்தம் நாறும் தன்கையால்
புலவு நாறு என்தலை
தைவருமன்னே
..................
ஆசாகு எந்தை யாண்டுளன்
கொல்லோ
இனிப்பாடுநரும் இல்லைப்
பாடுநர்க்கு ஒன்று
ஈகுநருமில்லை
..................'
(புற. 235)

என 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தீர்' எனப்பாடிய ஔவையாரே நெஞ்சங் கலங்குகின்றார்.

மதுரையிலே கோவலன் பாண்டியனால் நீதி தவறிய நெறியில் வெட்டுண்டிறந்த போது தனது அன்பனைப் பிரிந்த ஆற்றாத்துக்கத்தினால் கண்ணகி இரத்தக் கண்ணீர் வடிக்கிறாள். அவளது வார்த்தைகளைச் செவிமடுத்தவர்கள் கலங்கிக் கவலா திருத்தலியலாது. கண்ணிழந்தான் பெற்று இழந்த கதையாகிவிட்ட கண்ணகியின் சோக வாழ்வின் உச்சக் கட்டமிது-

'இன்புறு தங்கணவர்
இடரெரியகமூழ்கத்
துன்புறு வன நோற்றுத்
துயருறு மகளிரைப்
போல்
மன்பதை அலர் தூற்ற
மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான்
அவலங்கொண் டழி
வலோ'

என்றிவ்வாறு கண்ணகி துன்புற்றுத் துடித்து நைந்துருகி அரற்றும் மொழிகள் கடின இதயத்தையுங் கலக்கமுறச் செய்யும். வேள்பாரியின் மகளிர் தம் தந்தையை இழந்தபின்னர் ஒருநாளிரவு தண் நிலவு பொழிகிறது. அப்பொழுது அவர்கள் தம் வயமிழந்து,

'அந்தத் திங்களில் அந்த வெண்ணிலவு பொழியும் வேளையில் எந்தையுடையவர்களாய் இருந்தோம். எம் குன்றும் பிறர் கொள்ளவில்லை. இந்தத்திங்கள் இவ் வெண்ணிலவில் வென்று எறி முரசின் வேந்தர் எம் குன்றையுங்கொண்டார். யாம் தாதையில்லாதவர்களானோம் என்ற பொருள்பட

அற்றைத்திங்கள் அவ்
வெண் நிலவில்

(V-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர்நாடகம்**

# அவன் சென்ற பாதை

## காட்சி இரண்டு

வானப்பாதை. நெடுந் தூரம் திரிந்து அலுத்த வெண்ணிலா மேகநிழலில் ஓய்வெடுக்கும் நேரம். தங்கள் வீட்டுப் பூஞ்சோலையில் மாதவியும் அவளின் தோழி பொன்னியும் முக்காடிட்டவர்களாய், அமுதன் வரவிற்காய் எதிர்நோக்கி நிற்கின்றார்கள்.

சிறிது போதில் அமுதன் வெகுளி கவிந்த முகத்தினனாய் அவ்விடம்வருகின்றான்.

மாத: என்மடல்கிடைத்ததல்லவா?

அமு: இல்லையே!

மாத: என்ன?

அமு: மடல் கிடைக்கவில்லை. உனது எழுத்துருவிலே கூற்றுவன் வந்து என் கண்ணூடே புகுந்து உயிரையும், உள்ளத்தையும் பருகினான். மாதவி, நீயா இப்படி எழுதினாய்? உன்னைச்சந்திக்க வேண்டாம், என்று எழுத உனக்கு எத்தனை துணிச்சல்?

மாத: என் துணிச்சல் பற்றிய ஆராய்ச்சி தங்களுக்கு வேண்டியதில்லை. மீண்டும் சொல்கிறேன். இனி நீங்கள் இங்குவரவேண்டாம். எங்கும் என்னைச் சந்திக்கமுயல வேண்டாம். போய் வாருங்கள். செத்த உணர்ச்சிகளையும், சீர்கெட்ட உள்ளத்தையும் குத்திக்கிளறிக் கொடுமைப் படுத்தவா நீங்கள்வருகிறீர்கள்?

அமுதன்: மாதவி, நானா உன்னைக் கொடுமைப்படுத்துகிறேன்? உன் எண்ணத்திலேயே உயிர்வாழும், உன் அன்பிலேயே உளர்ந்தளிர்க்கும் நான உன்னைக் கொடுமைப் படுத்துகிறேன்?

மாதவி! என்னைக் கொல்ல விரும்புகிறாயா; இதோ, உன் முன்னால் சிரந்தாழ்த்தி நிற்கிறேன். ஆனால் என்னைச் சித்திரவதை செய்யாதே. கடந்தகாலத்துக் காதற் கனவுகளையும், எமதுஇன்பக் கோட்டைகளையும் தகர்த்து விடாதே.

மாத: (காதைப் பொத்தியபடி) ஐயோ! முதலில் இந்த இடத்தை விட்டுப் போங்கள்.

பொன்: மாதவி! என்ன இது! உனக்குப்பைத்தியமா?

மா: (கண்ணீரும், வெகுளியும் கண்களிலே குமைய) பைத்தியமல்ல, வெறி! ஆம் வெறிதான். நீவாயை மூடு.

இதோ பாருங்கள். கடந்ததை மறந்துவிடுங்கள். என்னில் உண்மையான அன்பு இருந்தால் எனக்காகநீங்கள் செய்யக் கூடியது ஒன்றுதான். (அழுகையில் கரைந்தபடி) என்னை மறந்துவிடுங்கள்.

அமு: (வெகுளியோடு) மாதவி!

மாத: இனியும் என்னைப் பெயர்சொல்லி அழைக்க வேண்டாம்.

அமு: (கோபத்துடன்) என்ன சொன்னாய்? (அருகிலே செல்ல முயல்கிறான்)

மாத: நில்லுங்கள், அப்படியே. கிட்ட நெருங்காதீர்கள்.

(அமுதன் மலைத்து விறைத்து நிற்கிறான் மாதவி சோகத்தில் விம்மிவெடிக்கிறாள்)

மாத: (சொற்கள் தடுமாறித் தத்தளிக்க) நான் வேறொருவரின் உடைமைப் பொருள் என் கழுத்திலே மங்கல நாண் பூட்டப் போகும் என் கணவர் மீது ஆணை. என்னை மறந்துவிடுங்கள்.

அமு: (பரிகாசம் கலந்த குரலில்) மாதவி! நான் உன்னைப் புரிந்து கொண்டேன். இந்த மெலிந்த உடல், ஏழமை பொதிந்த நெஞ்சம் பல்லிளித்து உன் பின்னால் நாய்போலச் சுற்றித்திரிந்த என் பாச உணர்வு, இத்தனையும் உனக்கு வேண்டாது போய்விட்டன.

இனி உனக்குச் செல்வம் வரும்; பூரித்த மேனி கிட்டும்; ஆண்மையும், அறிவும் உன் அடிவருடும். இல்லையா?

(மாதவி மௌனமாய்த்தலை குனிந்துநிற்கிறாள். கண்ணீர் பொல, பொலவென்று மண்ணிலே சொரிகிறது)

ஏன் அழுகிறாய் மாதவி. ஆனந்தப்படவேண்டிய நேரமல்லவா இது? சிரி! சிரி!என்றுமே சிரித்துக் கொண்டிரு.

அழப் பிறந்தவன் நான்; அழுது அழுது, உன் நினைவிலேயே கரைந்துபோகிறேன்.

(விம்மி நிற்கிறான்)

நான் வருகிறேன், மாதவி! நான்வருகிறேன். வருங்கால சரித்திரம் துரோகத்திற்கு, ஏமாற்றிற்கு, நிறம் மாறும் பச்சோந்தித் தனத்திற்கு உதாரணம் தேடி அலைய வேண்டியதில்லை. மாதவி என்ற ஒருத்தியிலேயே அது, அத்தனை பண்பையுங்கண்டு வியக்கும்.

(மாதவி விம்மிக்கதறிஅழுகிறாள்)

மாதவி! அழாதே. நான் இவ்வளவு கோபமாகப் பேசினாலும், உனது விழிகளிலே நீர் நிறையக் கண்டால், என்னால் பொறுக்க முடியாது. அழாதே...அழாதே. நான் போய்விடுகிறேன். உனது துன்பத்திற்குநான்எவ்வகையிலும் காரணமாக மாட்டேன். எனது சொற்கள் உன் நெஞ்சைப் புண்ணாக்கியிருந்தால், மாதவி! அந்தப் புண்ணை ஆற்ற எனது இரத்தநாடிகளிலே துடிக்கின்ற ஒவ்வொரு துளி இரத்தமும் ஆவலோடு காத்து நிற்கும், மாதவி! காத்து நிற்கும் நீ வாழ்க.

(போகிறான். மாதவி பொன்னியின் தோளிலே சாய்ந்தபடி அழுகிறாள்)

பொன்:- (கோபத்துடன்) அழுகிறாயா? நல்லாய் அழு. 'என் உயிருக்குள் உயிராய் அவரைப் புதைத்துக் கொண்டு, அவர் புன்சிரிப்பிலே என் இதயத் தாமரை மலர நான் வாழ்வேனடி' என்று சொன்ன நீ, இன்று அவரை வதைத்து வாட்டி அனுப்பியிருக்கிறாய். நீவாழ்வாயா? கேடுகெட்டவளே! பெண்ணினத்திற்கே நீ ஒரு களங்கம்.

மாத:- (கோபத்தோடு பொன்னியின் கன்னத்தில் அறைந்து) சீ வாயை மூடு.

[சிறிது நேரத்தில் கோபம் தணிந்து பொன்னியைத் தழுவிக் கொள்கிறாள்]

பொன்னி! நீயுமா என்னை உணரவில்லை? என் தந்தையின் கொலைப் பார்வையிலே அவரைச் சிக்க வைக்கக் கூடாது என்று நான் ஆடிய நாடகத்தை நீயுமா அறிந்து கொள்ளவில்லை?

இனியும் நான் அவரைச் சந்தித்தால் அவரின் உயிருக்கே உலைவைத்து விடுவதாக என் தந்தை சொல்லி விட்டார். விடிந்தால் எனக்குத் திருமணம். இந்நிலையில் அவர் என்வீட்டு வாயிலில் ஏறினால், அதை என்தந்தை கண்டால், ஐயோ! அதை நினைக்கவே வேண்டாம்.

பொன்:- சரி, நீ தீர்மானித்துவிட்டாயா? உன் அத்தானையே மணம் செய்வதாய் உறுதி கொண்டு விட்டாயா?

மாத:- எல்லாம் பொழுது விடிந்தால் தெரிந்துவிடுகிறது.

பொன்:- என்னதான் செய்வாயோ? பல தர்ப்பங்களில் உன்னைப் புரிந்து கொள்ளவே கூடுவதில்லை. எக்கேடாவது கெட்டுப்போ. நான் வருகிறேன். உனக்காக இரங்குவதே பாவம்.

(போகிறாள்)

மாத:- பொழுதும் புலரும் கதிரோனும் தோன்றுவான். புதிய நாளை வரவேற்கக் கமலமும், மல்லிகையும் காந்தளும் காத்திருக்கும். ஆனால் அந்த ஒளியமுதைக் காண என் விழி மலர்கள் மலரமாட்டா. தென்றலும் வீசும். அதிற் சிலிர்த்திட இந்த உடல் இருக்காது. பல் சுவை உணவும், பாலும் எனக்காகக் காத்திருக்கும். ஆனால் அவற்றிற்காய் என் வாய் திறவாது.

அன்பே! கொடுமையின் பிழம்புருவம் என்று என்னை எண்ணியிருப்பீர்கள். துரோகம் என் நெஞ்சிலேதான் அடைக்கலம் புகுந்துள்ளது என்று கருதியிருப்பீர்கள். ஆனால் புலர்கின்ற பொழுது எனது உண்மைத்தன்மையை உங்களுக்கு உணர்த்திவிடும்.

(இடையிலிருந்த நஞ்சுப் போத்தலை உருவி எடுக்கிறாள்)

நஞ்சே! நீயே என் தஞ்சம். ஆதரவு தரவேண்டிய அன்னை அரக்கியாகிவிட்டார். பாசங்காட்டுந்தந்தை பாதகனாகிவிட்டார். அஹிம்சையின் பேருருவாம் அருகனை வணங்கியும், அன்பகத்தில்லா அரக்கனாகிவிட்டார். அவரின் குலப்பெருமை என் வாழ்வையே குலைத்துவிட்டது! இனி நான் எவ்வண்ணம் வாழ்வேன்? எனக்கு வேறு துணையாரும் இல்லை. காலனின் ஊருக்கு வழித்துணை நீதான்.

(நஞ்சைக் குடிக்கிறாள்)

அமுதன்! என் நெஞ்சைக் கல்லாக்கி உங்கள் உள்ளத்தை எரிமலையாக்கிவிட்ட என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் அன்பே மங்கல நாணாய் என் கழுத்திலும், கருத்திலும் ஊசலாடும் பொழுது, வேறொருவன் என் மணவாளன் ஆவது எப்படி? அந்தப் பேச்சை எப்படி நீங்கள் நம்பினீர்கள் அமுதன், எப்படி நம்பினீர்கள்?

(வாந்தி எடுக்கிறாள்)

பொன்னி என்னை ஐயுற்றாள். மாதோட்ட நகரமே எனக்கு மாசு கற்பித்தது. உள்ளத்தில் ஒருவனை ஏற்று, உடலுக்கு மற்றொருவனைத் தலைவனாக்கும் பாதகி என்று ஓலமிட்டது, நான் அஞ்சவில்லை; கலங்கவில்லை. ஆனால்......அமுதன்....! உங்களின் உள்ளம் புகுந்த என்னை, உங்களையன்றி உலகமேயில்லாத என்னை நீங்கள் எவ்விதம் ஐயுற்றீர்கள்? நீங்கள் வெகுளிகொண்டு என் முன்னால் வந்த பொழுதே, நான் உள்ளத்தால் செத்துவிட்டேன்.

இப்போது சாவது என் உடல்தான்......நான்.....வருகிறேன்......

(வீழ்ந்திறக்கிறாள்)

(திரை)

(தொடரும்)

— "சொக்கன்"

(III-ம் பக்கத்தொடர்ச்சி)

### சிறுகதை

வன்போல் திறந்த வாய் மூடாமல் நின்றான்.

குழந்தையை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டு ... ர்ந்து அமைதியாக வந்தாள் என் மனைவி.

[இரத்ததான கவிதைப் போட்டியில் இரண்டாவது பரிசு (ரூ. 75) பெற்ற கவிதை]

# குருதிக் கொடை

— பொன். சின் —

தொன்னாள் அரசர்களும் தோன்றுபல வள்ளல்களும்
தன்னா லியன்றவரை தானங்கள் செய்துயர்ந்தார்.
''அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்''கென்று
மன்பதைக்காய் வள்ளுவனார் கூறிவழியமைத்தார்.
என்புதசை யெல்லா மிளம்புறவுக் கீந்தசிபி,
தந்தைக்காய் வாலிபத்தைத் தானமிட்ட பூருதலை
வந்தோன் வறுமையறத் தானீய வாழ்குமணன்,
விந்தைக்கொடை கொடுத்தார் வெல்லுமறம்
பூண்டனரே.
சிந்தை செய்மின்! நீர்குருதித் தானம் செயவிழைமின்;
அன்ன சொன்ன கண்தானம் ஆமாபூதானங்கள்.
மன்னுங் கலைமாதர் மற்றுமுள தானவகை
தன்னி லுயர்விரத்த தானமுயிர் காத்திடுமே!
உதிரம் கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆயினரே.
இறைவன் படைத்தவுட லெந்திரத்தி னுள்ளிதயம்
அறையும் டியெமது ஆட்சிக் கடங்காமல்
முறையில் தவறாது தானே துடிதுடிக்கும்;
நிறையுணவி னாலான செங்குருதி நீத்தமெலாம்
துள்ளிப் பரந்துடலம் மீண்டிதயம் வந்துபுகும்;
உள்ளே உடல்கழுவி ஊட்டுமுயிர்ச் சத்துதவிக்
கள்ளப் பிணியறுத்துக் காலமெலாம் வாழவைக்கும்
இன்ன மகிமைதரும் எங்குருதி எம்முடலில்
தன்னேரி லீசன் சமைத்தளித்தல் கண்டீரே!
மெத்தும் குருதிக் கொடைக்குயர்வு யாதுமிலை.
புத்தம் புதுநோய்கள் பூவுலகில் தோன்றிவர
அத்தனையு மாற்றுநெறி ஆய்ந்தறியும் விஞ்ஞானி
சுத்த வுதிரத்தை ஆக்கும் செயலறியார்.
ஆதலினால் பல்லா யிரம்மருந்து ஆங்கிருந்தும்
சாதல் தனையகற்றச் சார்மருத்து வக்கலைஞர்
பல்லோர் முயன்றும் பைந்திரத்தம் இன்மையினால்
நல்ல உயிர்கள்பல நைந்து நைந்து மாண்டனவே.
செங்குருதித் தானச் செயல்படுத்தும் யாழ்ப்பாண
நல்லிரத்த தானசங்கம் நம்மை அழைக்கிறது.
நல்லோர் குருதிக் கொடை கொடுத்த நன்றியினால்
அல்லலுற்ற நோயார் அநேகர் பிழைத்தெழுந்தார்.
கொடுக்கக் கொடுக்கக் கொடுநோயார் பெற்றமையால்
அடுத் துதிரம் வேண்டி அவலமுற்று நிற்போர்க்கு
ஈயும் வகையிரத்த மில்லா திரத்த வங்கி
ஓயும் நிலையில் உறங்க, உறுபிணியார்
சோர்ந்து வருத்தித் துடிதுடித்து துன்ப நிறைந்
தாழ்ந்து மயங்கி அந்தகனின் கைபடற்கு
வீழ்ந்து கிடக்கின்றார், விம்முகின்றார் சுற்றத்தார்.
இன்றவர்க்கு. நாளை எமக்காம், இனத்தார்க்காம்.
நன்றிதனைச் சிந்திப்பீர், நல்லகொடைசெய்துயர்வீர்.
மாதா வுதரத்தில் மன்னுகரு வாயுதிரம்
தாதா வெனவுறுஞ்சி நீர் வளர்ந்ததேன் மறந்தீர்!
''கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி,''ச்
சின்னக் குழந்தை வடிவில் சிறிதழுது
வன்னப் பயோதரத்தை வாயாற் கடித்திழுத்து
அன்னைதரப் பாலுதிரம் அன்றருந்தி நின்றீரே!
பின்னும் பசுவுதிரம் பாலென்று நீர் குடித்தீர்.
முன்னாட் குருதிக்கடன்கள் மறந்தீரோ!
இன்றோ, உணவுகளை உட்புகுத்திச் சீரணித்து
நன்றாமுதிரம் பெருக்குமுடல் பெற்றீரே!
இறைத்த கிண றூறும். ஈந்ததனால் நும்முடம்பு
குறைத்த உதிரத்தை, நல்லுணவால் கூட்டிடலாம்
சின்னாள் இறைத்துநீர் செய்தகடன், தெங்குமரம்
பன்னாள் இளநீர் படைத்தளித்தல் பாரீரே!
ஊற்றாய்ப் பெருகி உடல்வளர்க்கும் நுங்குருதி,
ஆற்றுப் படுத்தும் அறுவைக் கலாநிதிகள்
ஏற்றிடவே காத்திருப்பர், ஏன் தயக்கம் இன்றெழுக.
நோவாதே நும்முதிரம் நுண் கருவி யாற்பகுத்து,
ஆவா வெனத் துடிக்கும் பல்லா யிரவுயிர்கள்
சாவாது காப்போர் பணியில் செலவிடுக
சாகப் பிறந்தவரே! சாவதற்கு முன்பாக
சாகுமுயிர்கள்தமைச் சாகாமற் செய்திடுக.
ஆருயிரை உண்டாக்க ஆருமிலர் இவ்வுலகில்.
ஒருயிரைக் காக்கவழி உம்மிரத்த தானமதே.
ஆருயிரைக் காக்க உதவின், அவர் குடும்பம்
நாடு மொழி தேசம் நம்மினமும் வாழ்வடையும்
அரசு தரும்மருந்து அத்தனையும் சித்தியுறும்.
புண்ணியமும் கோடி, பொருளும் பெறலாமே!
பண்ணிய பாவங்கள் பட்டழியும் வாய்ப்புறலாம்.
பிறந்த பிறவிப் பயனடைந்து பீடுறலாம்
எல்லா அறமும் எமக்களிக்கும் பேறனைத்தும்,
நல்ல குருதிக்கொடையொன்றே நண்ணுவிக்கும்.
நல்ல பகுத்தறிவைப் பெற்றபயன் நாமடைவோம்.
கட்டாய ராணுவம்போல் இக்கொடையை நம்மரசு
இட்டால் ஒருசட்டம் ஈயாதிருப்பீரோ?
உள்ளம் இளகி ஊக்கம் மிகப்பெற்று
கொள்ளு மினத்தவர்கள் ஊரார் நகரத்தார்
பல்லோரும் சேர்ந்து படைபோல் திரண்டெழுந்து
பொல்லாதநோய்களொடு போர்புரியும் ஆயுதமாம்
நல்லிரத்தம் பைந்து பைந்தாய் நாடோறும் ஈந்துதவி
எல்லோரும் வாழ இரத்தவங்கி யைநிறைத்து
நல்ல பணியிதனை நாம்புரிந்து நாடறிய
வல்லவராய் வாழ்வோம் வளர்ந்து.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அல்பெட்ரோ மொருவியா

எழுதிய

## இத்தாலிய சிறுகதை

# ஏழாவது குழந்தை

நான் விவாகம் செய்யாத இளமைப் பருவத்தில், எனது முக்கிய பொழுது போக்கு பத்திரிகைகளில் வெளிவரும் உள்நாட்டுச் செய்திகளை வாசிப்பதாகும். மக்களுக்கு ஏற்படும் பலவித துன்பங்களையும் அவை எடுத்துக் கூறும். கொள்ளையடித்தல், கொலை செய்தல், தற்கொலைகள் இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக அவை கூறும் ஒரு துன்பச் செய்தி நடக்கமுடியாத பொய்போலத் தோற்றும். இரக்கப்படவேண்டிய அச்செய்தியைக் கண்டு நான் எனக்குள்ளே சிரித்த காலமும் உண்டு. அப்போதெல்லாம் ஒரு குடும்பபாரத்தைச் சுமக்கும் அனுபவம் எனக்கு ஏற்படவில்லை. ஆனால் இப்போது மேற்படி பத்திரிகைகள் குறிப்பிட்ட ''பரிதாப நிலை'' என்ன என்பதைப் பற்றி நான் படிப்படியாக உணர்ந்து வருகிறேன். ''பரிதாப நிலை'' என்பதற்கு பத்திரிகைகள் செய்தியுடன் கோர்த்துக்கொடுத்த பல பின்னணிகள் எனது எண்ணத்தில் இப்போ மின்னுகின்றன. ''உக்கிர வறுமையில் உழல்பவர்கள் பெயரளவில் வீடு என்னும் ஒன்றில் வசிக்கிறார்கள்''. அதே பரிதாப நிலையில் இப்போது நானும் இருக்கிறேன். கொடிய வறுமையினால் வாடுகிறேன். ரொமறன்சியோ என்னும் இடத்தில் ஒரு வீட்டில் எமது மனைவியுடனும் ஆறு பிள்ளைகளுடனும் வசிக்கிறேன். வீடென்பது ஒரு அறை. கீழே காலில் மிதிபடும் பொருட்கள். மழை பெய்யும் போது வீதியில் பெய்வதற்கும் எங்கள் வீட்டினுள் பெய்யும் மழைக்கும் அதிக வித்தியாசமிருக்காது.

இந்த நிலையில் எனது மனைவி ஏழாவது முறை கர்ப்பவதி ஆனாள். கூடவே ஓர் எண்ணமும் அவள் மனதில் உதித்தது. அது வெறும் எண்ணமல்ல, ஓர் தீர்மானம்-பாவம் நிறைந்த தீர்மானம். அந்தத்தீர்மானம் என்னுடைய முழுச்சம்மதத்தையும் பெற்றது... மாரிகாலம் முடிந்து அடுத்த கோடை வரத்தொடங்கியவுடன் பிறக்கப்போகும் குழந்தையை ஒரு கிறீஸ்தவ தேவாலயத்தில் யாருக்கும் தெரியாது விட்டுவிடுவது என்பது தான் அந்தத் தீர்மானம். அதை முதலில் காண்பவரின் தயவில் அக் குழந்தையின் வளர்ச்சியும் பிற்கால வாழ்வும் தங்கியிருக்கும்.

உரிய காலத்தில் எனது மனைவி ஆஸ்பத்திரியில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். சிலநாட்களின் பின் அவள் வீட்டிற்குத் திரும்பிவந்தாள். குழந்தை திடகாத்திர முள்ளதாகவும் கணீரென்ற அழுகை ஓசையுடையதாயுமிருந்தது. இரவில் அது அழுதால் வீட்டில் ஒருவரும் நித்திரைகொள்ள முடியாது.

மே மாதத்தில் காற்றில் சூடு ஏறத் தொடங்கியது. நாங்கள் ரொமறன்சியோவிலிருந்து ரோமுக்கு குழந்தையுடன் புறப்பட்டோம். என் மனைவி குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டாள். பிள்ளையைப் போதிய கந்தைத்துணிகளால் மூடியிருந்தாள். அதனுடன் பிள்ளையைத் தனியே பனிபெய்யும் வயலில் விட்டாலும் கூட அதற்கு எதுவித ஆபத்தும் நேராது.

எங்கள் தீர்மானப்படி அந்த அழகிய குழந்தையை ஓரிடத்தில் விட்டுச் செல்வதை இப்போது எனது மனைவியின் தாயுள்ளம் விரும்பவில்லை. தனது உண்மையான எண்ணத்தை மறைப்பதற்காக அவள் ஏதேதோவெல்லாம் பேசலானாள். நடுவே நிறுத்தாமல் ஒரே தொடர்பாகப் பேசினாள். அவள் தலை கலைந்திருந்தது. அவள் கண்கள் எங்கேயோ வெறித்துப் பார்த்தபடியிருந்தன அவள் குழந்தையை எந்தவிதமான தேவாலயத்தில் பத்திரமாக விடவேண்டும் என்பதுபற்றி விவரித்தாள். எனக்கு அவள் பேச்சு வெறுப்பைக் கொடுத்தது. உண்மையைச் சொல்லப்போனால் என் மனமும் இந்தச் செயலை வெறுத்தது தான். ஆனால் என்ன செய்வது? அவளின் தொடர்பான பேச்சை நிறுத்துவதற்காக அவளை இடைமறித்து, ''நாம் குழந்தையை சென் பீற்றர் தேவாலயத்தில் விட்டுச் செல்லலாம்'' என்று சொன்னேன். ஒரு நிமிடம் அவள் தன் வாயடைத்து திகைத்து நின்றாள். பின், ''இல்லை அது ஒரு பெரிய தேவாலயம்; அங்கே வருபவர்கள் குழந்தையைக் கவனிக்கக் கூடமாட்டார்கள்'' என்றாள். ''அதிலும் பார்க்க கோல்டோனியில் உள்ள சிறிய தேவாலயத்தில் அவனை விடலாம். தேவாலயத்தின் முன்னே அழகிய கடைகள்இருக்கின்றன. அத்தேவாலயத்திற்கு அநேக செல்வந்தர்கள் வருகிறார்கள்'' என்று யோசனை கூறினாள்.

அந்தப் பட்டினத்திற்குப் போவதற்காக நாங்கள் பஸ் வண்டியில் ஏறினோம். பிரயாணத்தின் போதெல்லாம் என் மனைவி ஒன்றும் பேசவில்லை. கோல்டோனியில் வண்டியிலிருந்து இறங்கியவுடனே மீண்டும் கதைக்கத் தொடங்கிவிட்டாள். ஒரு நகைக் கடைக்கு முன்னே அவள் கால்கள் தம்பித்தன. கடையில் இருந்த கண்ணாடி அலமாரியில் பவுண்நகைகள் சிவப்புநிற வெல்வெற் அங்கிகளில் மின்னின. ''இவை எவ்வளவு அழகாய்இருக்கின்றன'' அவள்கூறினாள்: ''மக்கள் இவற்றினைப் பார்க்கவும் வாங்கவுமே இங்கே கூடுகின்றார்கள். ஒவ்வொருகடையாகப் பார்த்துக் கொண்டு போவார்கள்; இறுதியில் ஆலயத்திற்குச்சென்று ஒரு நிமிடம் பிரார்த்தனை செய்வார்கள். நிம்மதியான உள்ளத்துடன் திரும்பும்போது எங்கள்குழந்தையைக் கண்டு எடுத்துச் செல்வார்கள்'' நகைக்கடையைப் பார்த்தபடி தன்னுள் பேசிக்கொள்வதைப்போல இவ்வாறு கூறினாள்.

அதன்பின் நாங்கள் அந்த வீதியில் உள்ள ஆலயத்துள் சென்றோம். அவள் ஆலயத்துள் நாலுபக்கமும் சுற்றிவந்தாள். எல்லா ஆசனங்களையும் நோக்கி[illegible] குழந்தையை வி[illegible] ஒரு வசதியான இடத்தை அவள் கண்கள் தேடின. நான் சற்றுத் தூரமாக அவளைப் பின் தொடர்ந்துநடந்தேன். திடீரென ஒரு சிவப்பு அங்கி அணிந்த பெண் ஒருத்தி கோவிலினுள்ளே நுழைந்தாள். அவளுடைய தலைமயிர் பொன்போல் பிரகாசமுடையதாயிருந்தது. அவள் முழந்தாளில் நின்று வணங்கினாள். ஒரு நிமிட மாத்திரத்தில் அவள் தனது வணக்கத்தை முடித்துக்கொண்டு எங்களையோ அல்லது வேறு எதையுமோ எப்பொருளையுமோ திரும்பியும் பாராமல் வெளியே சென்றுவிட்டாள். இதைக்கவனித்த என்மனைவி ''இது ஒரு நல்ல இடமல்ல. இங்கே வருபவர்கள் மிகஅவசரப்படுபவர்களாக இருக்கிறார்கள்'' என்று கூறிக்கொண்டே ஆலயத்திற்கு வெளியேவந்தாள்.

மேலும் சிறிது தூரம் நடந்துசென்றோம். வழியில் தென்பட்ட மற்றோர் ஆலயத்திற்குச் சென்றோம். அது நாங்கள் முன்பு சென்ற ஆலயத்திலும் பெரிதாகவும் செல்வக் கொழிப்புள்ளதாகவும் காணப்பெற்றது. அங்கு காணப்பட்டவர்கள் யாவரும் விலை உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார்கள். மதகுரு ஒருவர், பீடத்திலிருந்து உபதேசம் செய்து கொண்டிருந்தார். எனக்கு இது நல்ல இடமாகத்தெரிந்தது. ''நாங்கள் அவனை இங்கே விட்டுச்செல்வோமா?'' மனைவியிடம் இரகசியமாக வினவினேன். அவள் சம்மதத்தின் அடையாளமாகத் தலையசைத்தாள். விரைவாக இருட்டான ஓர் இடத்தில் உள்ள கதிரையில் துணியால் மூடப்பட்ட குழந்தையை வைத்தாள். பின், முழந்தாளில் நின்று, வெகுநேரம் பிரார்த்தனை செய்தாள். உணர்ச்சியற்ற முகத்துடன் எழுந்து நடந்தாள். நான் முன்னே விரைவாகச் சென்றேன் தேவாலய போதகரின் குரல் உரத்துக் கேட்டது. ''யேசு சொன்னார். பீற்றர் நீ எங்கு போகிறாய்.''

நான் திடுக்குற்றேன். என்னைப் பார்த்தே அவர் அக்கேள்வியைக் கேட்பதாக மனம் துணுக்குற்றது. எனது மனைவி வாசல் திரையை நீக்கக் கைகளை உயர்த்தினாள். பின்னால் வந்த குரல் எங்கள் இருவரையும் திகைக்க வைத்தது. ''நீங்கள் ஏதோ பொருளை கதிரையில் வைத்து விட்டு அதனை மறந்து செல்கிறீர்கள்'' இப்படிக் கூறியவள் ஆலயத்தில் வேலை செய்யும் ஒருபெண். ''மிகநன்றி. நான் மறந்து தான் போனேன்'' மனைவி சீலையில் சுற்றப்பட்டுள்ள குழந்தையை திரும்ப எடுத்துக்கொண்டாள். அங்கிருந்து வெளியேறி வீதியில் வந்தபோது ''எனது இச்சிறு குழந்தையை ஒருவரும் விரும்பவில்லை'' என்றாள் அவள்.

வீதிவழியே விரைவாக நாங்கள் நடந்தோம். வீதியில் சந்தித்த மற்றோர் ஆலயத்துள் நுழைந்தோம். இப்போதுகுழந்தை பசியால் வீறிட்டழத் தொடங்கியது. என் மனைவி ஆலயத்தின் ஒருபகுதியிலிருந்து குழந்தைக்குப் பால் கொடுக்கத் [illegible] ஒரு [illegible] குரல் அதிர்ந்தது. ''கடவுளின் இல்லத்தில் அதைச் செய்யக்கூடாது. வெளியாற் போ'' அவ்வாறு கூறியவன் ஆலயத்தின் காவற்காரன். அவனுடைய தோற்றம் அவன் குரலை விடச்சின்னதாயிருந்தது. அவன்தன் நீண்ட வெண் தாடியைக் கையால் தடவிக் கொண்டான். என் மனைவி எழுந்து மார்பணியைச்சரி செய்து கொண்டே ''கன்னிமேரி கையில் ஒரு குழந்தையுடன் காட்சியளிக்கும் படங்களை நீ பார்த்ததில்லையா?'' என்று அந்த மனிதனைக்கேட்டாள். ''அகங்காரம் பிடித்த பெண்ணே, நீ உன்னை பரிசுத்த கன்னி மாதாவுடன் ஒப்பிடுகிறாயா?'' அவன் திரும்பிக் கோபத்துடன் மொழிந்தான். அம்மட்டில் அங்கிருந்து நாங்கள் விரைவாக வெளியே போனோம். ஒரு மரத்தின்பக்கமாக அமர்ந்து எனது மனைவி குழந்தைக்குப் பால்கொடுத்தாள். குழந்தை மீண்டும் நித்திரை செய்யத் தொடங்கியது.

மாலை நேரமும் மங்கிக் கொண்டே வந்தது. ''நாங்கள் இப்படியே அலைந்து கொண்டிருக்க முடியாது. எப்படியாவது நமது நோக்கத்தை நிறைவேற்றவேண்டும்'' வெறுப்புடன்பேசினாள் என் மனைவி. ''அவன் உங்கள் இரத்தம். அவனை மூலையில் எறிந்துவிட்டுப்போகச் சொல்லுகிறீர்களா?'' என்று ஆத்திரப்பட்டாள். ''ஆனால் சிலவற்றை நினைத்தவுடனே செய்து முடித்து விட வேண்டும். சிந்தித்துக் கொண்டு நிற்பதால் ஒன்றுமே செய்ய முடியாமல் போய் விடும்'' என்றேன்.

''ஆண்கள் பேடிகள்; நீங்கள் நான் மனதை மாற்றிக் கொண்டு விடுவேனோ என்று அஞ்சுகிறீர்கள்" — அவள் சீறினாள். நான் அவளை மறுத்துப் பேச விரும்பவில்லை. வேகமாக மேலே நடந்தோம். எங்கே போகிறோம் என்பதைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. வழியில் ஒரு சிறிய குறுக்குத்தெரு எதிர்ப்பட்டது. அதன் வழி திரும்பி நடந்தோம். அங்கே ஒரு மோட்டார் நின்றது. அதன் பின் கதவை நான் போய்த்திறந்தவுடனே அது திறந்து கொண்டது. ''இது தான் தருணம் விரைவில் குழந்தையை இங்கே வை'' இவ்வாறு கூறியவுடனே மனைவிகுழந்தையை ஆசனத்தில் வைத்தாள். நான் கதவைப் பூட்டினேன். மனைவியின்கையைப்பிடித்து இழுத்துக்கொண்டுவிரைவாக அவ்விடத்தைவிட்டுநடந்தோம்.

நகரத்தின் மாடியில் தெரிந்த விளக்குகள் ஒவ்வொன்றாக அணையத் தொடங்கி விட்டன. தெருவின் ஓரமாக ஓரிடத்தில் மனைவி அமர்ந்து அழத் தொடங்கினாள். ''நான் அவனை இழந்து விட்டேன்'' அவள் விம்மினாள்.

''ஆம்'' -நான் கூறினேன். ''எப்படியோ அவ்வாறு நடக்கத்தானே வேண்டும்'' அவள் தோள்களை அசைத்தாள். கண்களில் ததும்பிய கண்ணீர் திடீரென வற்றியது. முன்னால் உள்ள பெரிய மாளிகையைப் பார்த்தாள். ''நான் போய் அரசனிடம் இதைப்பற்றிக் கூறப் போகிறேன்'' என்று எழுந்தாள். ''அரசன் இப்போ அங்கு இல்லை என்பது உனக்குத் தெரியாதா?''

''அதனாலென்ன, அரசன் இல்லாவிட்டால் அரசனுக்கு பதிலாய் இருப்பவரிடம் கூறுவேன்.'' —இவ்வாறு கூறிக் கொண்டே அவள் அந்த மாளிகையின் வாசலை நோக்கி நடந்தாள்; ஓடினாள் என்றே கூறலாம்.

''இங்கே பார்'' நான் அவளைத் தடுத்து நிறுத்திக் கூறினேன். நாங்கள் திரும்பிப்போய் அந்தமோட்டார் வண்டியில் உள்ள குழந்தையை எடுத்துக் கொண்டு வருவோம்''.

நான் கூறிய வார்த்தைகள் அவளிடம் பெருமாற்றத்தை ஏற்படுத்தின, எனவே நாங்கள் அச்சிறிய தெருவை நாடி திரும்பவும் நடந்தோம். மோட்டார் வண்டியும் அந்த இடத்திலேயே இன்னமும் நின்றது. எனது மனைவி முன் சென்று கதவைத் திறந்தாள். ''நில் நில்'' என அதட்டிக் கொண்டே அவ்வமயம் ஒரு நடுத்தர வயதுள்ள மனிதன் எங்களை நோக்கி வந்தான். ''என்வண்டியில் என்னசெய்கிறாய்?'' அவன் கேட்டான்.

எனது மனைவி பதில் கூறாமல் பிள்ளையைத் தூக்கி அணைத்துக் கொண்டாள்.

''நீ இங்கே என்ன செய்கிறாய். இது என்னுடைய மோட்டார் வண்டி. நான் சொல்வது உனக்கு விளங்கவில்லையா? கையில் வைத்திருக்கும் பொருளென்ன?'' இவ்வாறு கூறிக் கொண்டே அந்தமனிதன் அவளை அணுகி வந்தான். என் மனைவி அவனைக் கோபத்துடன் பார்த்துக்கொண்டே, ''அது ஒரு பொருளல்ல. என்குழந்தை. விரும்பினால் நீ அவனைப்பார்க்கலாம்''—குழந்தையைமூடியிருந்ததுணியைநீக்கிக்காண்பித்தாள்.

''நீரும் உமது மனைவியும் இவ்வளது அழகான குழந்தையை ஒருபோதும் பெற்றெடுக்க முடியாது. மற்றோர் பிறவியெடுத்தாலும் முடியாது. ஓய்! இனியும் என்னைக் கேள்வி கேட்டுத் தொல்லை கொடுத்தால் பொலிசாரை அழைத்து நீர் எனதுகுழந்தையைகளவாட முயற்சிப்பதாகப் பிராது கொடுப்பேன்.'' என் மனைவி கூறிய வார்த்தையில் அந்த மனிதன் பிரமை பிடித்த

(11-ம் பக்கம் பார்க்க)

தமிழாக்கம்: வ. குகசர்மா

## வால்டேர்

மனித உரிமையை உயிரினும் மேலாகப் போற்றியவர் வால்டேர். 'நீ சொல்லுவதில் ஒரு வார்த்தையைக்கூட நான் ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அதைச் சொல்லுவதற்கு உனக்குள்ள உரிமையைப் பாதுகாப்பதற்காக உயிருள்ளவரையில் போராட நான் தயார்!' என்பதுதான் அவருடைய உரிமைத்தத்துவம். தேவாலயத்தில் புதைக்கப்பட்ட அவரது சடலம், பிரஞ்சுப் புரட்சிக்குப் பிறகு தோண்டி எடுக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, மற்றொரு மேதையான ரூசோவின் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டது. வால்டேரின் கல்லறையில் கீழ்க்கண்ட வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

''கவிஞன், தத்துவஞானி, வரலாற்று ஆசிரியன்; மனித சிந்தனையைச் சிறகடித்துப் பறக்கவைத்தவன் நம்மையெல்லாம் உரிமை வாழ்வுக்குத் தயார்படுத்தியவன்.''

84-வது வயதில் 1778-ம் ஆண்டு, மே மாதம், 30-ம் நாள் இவர் புகழுடம்பு எய்தினர்.

பி. சி. கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜி-கே. ஆர். விஜயா திடீர் திருமணம்!

## கோவிலில் ரகசியமாக நடந்தது!

சிவாஜிகணேசனும், விஜயாவும் காதலர்கள். ஒருவரை ஒருவர் உள்ளன்புடன் நேசித்தார்கள்.

ஆனல் அவர்களைப் பிரிக்க சிவாஜிகணேசனின் மாமா சகஸ்ரநாமம் சதிசெய்தார்.

### ஜாதகப்பொருத்தம்

சிவாஜி கணேசனுக்கும் விஜயாவுக்கும் ஜாதகப் பொருத்தம் இல்லையென்று ஜோசியம்சொல்லச்சொல்லி சிவாஜிகணேசனின் அம்மாவை நம்பவைத்து விட்டார். இதனல் அவருடைய அம்மா விஜயாவைசந்தித்து தன் மகனை மறந்துவிடும்படி கேட்டுக்கொண்டார்.

அதன்படி சிவாஜி கணேசனை வெறுப்பதுபோல் விஜயா நடித்தார். ஆனல் சிவாஜிகணேசனை ஏமாற்ற முடியவில்லை.

### திருமணம்

விஜயாவை கோவிலுக்கு அழைத்துச்சென்று ரகசியமாகத் திருமணம் செய்து கொண்டார், சிவாஜிகணேசன்!

இந்தக்காட்சி வி. கே. ஆர். பிக்சர்ஸ் படத்திற்காக சாரதா ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது. கோபால கிருஷ்ணன் டைரக்ட் செய்தார்.



## இம்மாத வெளியீடுகள்

### யார் நீ!

பி. எஸ். வி. பிக்சர்சாரின் 'யார் நீ' படம் இம்மாதம் வருவதாகத்தெரிகிறது. இந்தப் படத்தில் ஜெயலலிதா இரட்டை வேடம் ஏற்றிருக்கிறர்.

மற்றும் ஜெயசங்கர், ஆனந்தன், ராமதாஸ், வீரப்பன், மனோரமா, லெட்சுமிராஜம் ஆகியோர்களும் நடித்திருக்கிறர்கள். வசனம் ராமு, இசை வேதா, டைரக்ஷன் சத்தியம்.

### நாடோடி!

பத்மினி பிக்சர்ஸின் 'நாடோடி' இம்மாதம்வெளிவருகிறது. இதில் எம். ஜி. ராமச்சந்திரனும் சரோஜாதேவியும் ஜோடியாக நடித்திருக்கிறர்கள்.

மற்றும் நம்பியார், வி. கே. ராமசாமி, நாகேஷ், புதுமுகம் பாரதி ஆகியோரும் நடித்துள்ளார்கள். மிகவேகமாக நடைபெறும் இதன் படப்பிடிப்பை பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்து வருகிறர்!

### 'சாது மிரண்டால்'

சன்பீம் புரொடக்ஷன்சாரின் 'சாது மிரண்டால்' என்ற சிரிப்புப் படம் இம்மாதம் திரைக்கு வருகிறது. இதில் கதாநாயகி யாரும் இல்லை. டைரக்டர் பீம்சிங் இதன் டைரக்ஷன் மேற்பார்வையை மேற்கொண்டிருக்கிறர்.

இதில் டி. ஆர். ராமச்சந்திரன், நாகேஷ், மனேகர், சகஸ்ரநாமம், நாகையா, புதுமுகம் கல்பனா, மனோரமா, ஓ ஏ. கே. தேவர், பொடி நடிகை பத்மினி ஆகியோர் நடித்துள்ளார்கள் திருமலை டைரக்ட் செய்திருக்கிறர்.

### குமரிப்பெண்!

ஈ வி ஆர். பிக்சர்சாரின் 'குமரிப்பெண்' படம் இம்மாதம் வெளிவரும் என்று தெரிகிறது இதில் ரவிச்சந்திரன், ஜெயலலிதா, எஸ். வி. ரங்கராவ், அசோகன், மனேகர், மாதவி, நாகேஷ் ஆகியோர் நடித்துள்ளார்கள். கதைவசனம் டி. என். பாலு, டைரக்ஷன் ராமண்ணா.




நாடகவிமர்சனம்

## 'இறுக்கடா பிட்டிசம்!'

"...வேலையில்லாமல் குடித்து வெறித்து கும்மாளமடித்துத் திரியும் கார்த்திகேசு, தன் மாமன் கந்தையா வாத்தியார்தமது மகள் அமாவாசையை கல்யாணம் செய்துதர மறுத்த காரணத்துக்காக, பஸ் கண்டக்டர் சிங்காரத்தின் உதவியுடன், அவருக்குப்பிட்டிசம் எழுதத் தீர்மானிக்கிறன். இருவரும்ஆங்கிலத்தில் பிட்டிசம் எழுதத் தெரியாத காரணத்தால் சிங்கப்பூர் பென்சனியர் ஒருவரின் உதவியை நாடுகிறர்கள். பென்சனியர், கந்தையா வாத்தியாரின் நண்பரானபடியால், 'கந்தையா வாத்தியாருக்குப் பிட்டிசம்போடுகிறேன்' என்று சொல்லிவிட்டு கண்டக்டர் சிங்காரத்திற்கு மாற்றுப்பிட்டிசம் எழுதுகிறர் "தன்வினை தன்னைச் சுடும்" என்றபடி யாருக்குக் கேடு செய்ய நினைத்தார்களோ, முடிவில் அவர்களுக்கே கேடு வந்து சூழ்ந்து விட்டது. தாங்கள் செய்த தவறுகளை நினைத்து திருந்தி இறுதியில் கந்தையா வாத்தியாரிடத்தில் மன்னிப்புக் கோருகிறர்கள்.

இப்படியே ஒருவருக்கொருவர் பிட்டிசம் எழுதிப் போட்டு தங்கள் வாழ்நாள் பூராகக் கஷ்டப்பட்டவர்கள் பின் திருந்திவிடுகிறர்கள்" இதுதான் 'இறுக்கடா பிட்டிசம்' நகைச்சுவை நாடகத்தின் கதை.

நெல்லியடி முருகையன் கோவில்வீதியில் புதுவருஷப்பிறப்பன்று நெல்லியடி சனசமூகநிலையவாலிபர்களால் நடாத்தப்பட்ட 'இறுக்கடா பிட்டிசம்' நகைச்சுவை நாடகத்தை எழுதித்தயாரித்து-கதாநாயகனை கந்தையா வாத்தியாராக நடித்த க. பேரம்பலத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கந்தையா வாத்தியார் சிங்கப்பூரில் இருந்துவிட்டு வந்தாலும் அவர் அசல் கிராமத்து வாத்தியார் தான். கண்ணிலேகண்ணாடி, குடுமி, அரைக்கை நாஷனல், பழுதடைந்த சிங்கப்பூர் குடை, சீன தேசத்துபெண்மணிகள் வைத்திருக்கும் கைவிசிறி. இத்தனை கோலங்களுடன் காட்சியளித்த இவர் உண்மையில் கிராமத்து கந்தையா வாத்தியாராகவே காட்சியளித்தார். நடிப்புக்கேற்ப குரல் ஈடுகொடுத்து, ஹாஸ்ய வசனங்களை உதிர்த்து ரசிகர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்து விட்டார்.

தோட்டக்கார கொக்கத்தடி சுப்பையா (சிவராசா)வின் சிலபகடிகள் பரவாயில்லை பஸ்ஸில் கீழ்த் தட்டில் சாரத்துடன்நிற்கும் கண்டக்டரையும், மேல்

(VII-ம் பக்கம் பார்க்க)

### சிவாஜிக்கு ராஜாஜி பாராட்டு!

நடிகர் சிவாஜிகணேசன் 'கண்ணன் காட்டிய வழி' என்ற புராணக்கதையைப் படமாக்குகிறர்.

'கண்ணன் காட்டிய வழி' என்று படத்துக்கு பெயர் சூட்டுவது சம்பந்தமாக ராஜாஜியிடம் ஆலோசனை கேட்கப்பட்டது.

'சிவாஜி கணேசன் 'கண்ணன் காட்டியவழி' என்ற பெயரில் கிருஷ்ண பரமாத்மாவின் கதையை படம் ஆக்குவது பற்றி மகிழ்ச்சி. இந்தப் படம் மக்களுக்கு பக்தியை பெருக்கச்செய்யும் விதமாகப் படமாக்கப்பட வேண்டும்' என்று கூறினர்.

இத்தகவலை ஏ. பீ. நாகராஜன் தெரிவித்தார்.

## இசை அரங்கேற்றம்



அண்ணாமலை சங்கீத பூஷணம் திரு. எஸ். எஸ் நடராசனின் இசை அரங்கேற்றம் யாழ். மாநகரசபை மண்டபத்தில் கடந்த 18-4-66 திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

இரு தீஷதர் க்ருதிகளையும், ஒரு தியாகராஜ கீர்த்தனையையும், நான்கு தமிழ் உருப்படிகளையும் பாடிவிட்டு 'ஒருதரம் சரவணபவ' என்ற இராகமாலிகை விருத்தமும் அதைத் தொடர்ந்து தமிழ் தில்லறைகளையும் பாடினர். முதன்முதலாக மேடையேறும் ஓர் இளம் பாடகரிடம் ஒரு கச்சேரியில் முக்கியமாக நாம் எதிர்பார்க்கும் ராகம், தாளம், பல்லவியை எதிர்பார்ப்பது சரியில்லை. வேறு சில கற்றுக்குட்டிகள்போல அவர் அந்த விஷயத்தில் கை (வாய்!) வைக்காமல் விட்டதும் நல்லதே.

பாடகரிடம் நல்ல சாரீர வளம் காணப்படுகின்றது. அதை அவர் பரிபூரணமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினல் கடுமையான அகார சாதகம் செய்ய வேண்டும். அத்துடன் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் மேடை ஏறிக் கச்சேரி செய்து சபைக் கூச்சத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும்.

உருப்படிகள் எல்லாம் உருக்குலையாமல் லய சுத்தமாகப் பாடப்பட்டன. கச்சிதமாக கற்பனு ஸ்வரமும் சில உடுப்படிகளுக்கு பாடினர். வாயை நன்ருகத் திறந்து பாடவேண்டியதும் அவசியம். முன்னணிக்கு வர வேண்டிய அறிகுறிகள் பலவும் பாடகரிடம் காணப்படுகின்றன. முயற்சிதான் வேண்டும்.

பக்கவாத்தியம் வாசித்த டி. வி. பிச்சையப்பாவும் (வயலின்), கே. சண்முகம் பிள்ளையும் (மிருதங்கம்), கே. கணேசனும் (கஞ்சிரா) பாடகருக்கு அனுசரணையாக வாசித்து கச்சேரியைச் சிறப்பித்தனர்.

-லாவண்யம்

### சபாஷ் நிர்மலா!

ஸ்ரீதர் கண்டெடுத்த புதுமுகங்களில்ஒருவரான 'வெண்ணிற ஆடை, நிர்மலாவுக்கு ஒரு 'சபாஷ்' கட்டாயம் கொடுக்கத் தான் வேண்டும்!

அவரது நடிப்பைப் பிரமாதப்படுத்தி, நடிப்புலகில் புதிய தாரகையாகிவிட்டார் என்று இல்லாத பொல்லாதவைகளை சொல்லி 'சபாஷ்' கொடுப்பதாக எண்ணிவிடாதீர்கள்—அவரது துணிச்சலுக்காகத்தான் இந்த 'சபாஷ்!'

இப்படி—இவ்வளவு தைரியமாக ஒரு பேட்டி அளிக்க எந்த நடிகைக்குத் தான் துணிச்சல் வரும் 'தினத்தந்திக்கு அவர் அளித்துள்ள துணிச்சலான அந்தப் பேட்டிக்காக அவருக்கு 'சபாஷ்' கொடுப்பதுடன் மட்டும் நில்லாது பாராட்டவும் செய்யலாம்!

சினிமா உலகத்தில் உள்ள தில்லுமுல்லுகளை அப்படியே சொல்லிவிட்டாரே!

பிரபல தயாரிப்பாளர் ஒருவரும், டைரக்டர்ஒருவரும் தனக்கு நடிக்க சந்தர்ப்பம் தருவதாகக் கூறி தன்னை 'வம்பு'க்கு இழுத்ததாக தினத்தந்தி நிருபரிடம் 'அப்பட்ட' மாக மனந்திறந்து சொல்லியிருக்கிருரென்ருல் ......

நிர்மலா, நீ துணிச்சல் காரிதானம்மா!

சினிமாஉலகத்தில் முன்னேறி பல படங்களில் நடிக்கவேண்டுமென்ற காரணத்துக்காக டைரக்டர்களிடமும், தயாரிப்பாளர்களிடமும் 'தஞ்சம்' புகுந்த, தமிழ்த்திரையுலக நடிகைகளின் கதைகளைக் கேட்டுத் தெரிந்து போனசமயத்தில் 'வெண்ணிற ஆடை' நிர்மலா இப்படியாக. நல்லதொரு லட்சியத்தைக் கொண்டு, துணிச்சலான பேட்டியொன்றை அளித்திருக்கிறர்!

நிர்மலாமீது 'பழிக்குப் பழி' வாங்க டைரக்டர்கள், தயாரிப்பாளர்கள் கங்கணங் கட்டிக்கொண்டிருப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஆனலும், நிர்மலா இன்னுமொன்றையும் சொல்லிவிட்டார்.

"எவரிடமும் நடிக்கச் சந்தர்ப்பம்கேட்டுப்போக மாட்டேன். வலியச் சந்தர்ப்பம் தந்தால்மட்டும் போவேன்."

சபாஷ்நிர்மலா, சபாஷ்!

-சினிமாப்பித்தன்

### "நாடகம் மூலம் முன்னேற்றமடையலாம்"

"கலைஞர்கள் தெய்வ அருள் படைத்தவர்கள். இவர்கள் சமுதாயத்தை நல் வழிப்படுத்துபவர்கள். நாடகக் கலைஞர்கள் தமது இலட்சியங்களை இலகுவாக மேடை நடிப்புமூலம் பொது மக்களுக்கு ஊட்டிவிடுவார்கள். அவர்கள் சேவை மகத்தானது." இவ்வாறு கரைச்சி கிராமசபைத் தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி தருமபுரம் மாதர் சங்கத்தாரால், காந்திசேவா சங்க மண்டபத்தில் நாடகக் கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றுகையில் கூறினர்.

கலவெட்டித்திடல், காந்தி சேவா சங்கத் தலைவர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் தனது தலைமையுரையில் கூறியதாவது:-

"பேச்சு மக்களை வசீகரித்து திருத்த உதவுகிறது. இதனிலும் பார்க்க, இன்னிசையும் பாடல்களும் அதிக சக்தியுடையவை. பாரதியாரின் பாடல்கள் எவ்வளவு திருத்தத்தைத் தந்துதவின! நாடகம் மூலம் புரட்சிகரமான முன்னேற்றத்தை நாம் நாட்ட முடியும்.

மங்கையர் சபைத் தலைவி திருமதி வே. சிவபாக்கியம், தலைமை ஆசிரியர் திரு. க. சங்கரப்பிள்ளை, திரு. எஸ். எஸ் கணேசபிள்ளை, திரு. ஆ. பரமசாமி, திரு. வீ. சுந்தரலிங்கம் முதலியவர்களும் பேசினர்கள்

### சர்க்கஸ் முதலாளி

ஆர். ஆர். பிக்சர்ஸ் கலர்ப்படத்தின் படப்பிடிப்பு வேலைகள் இப்போது மும்முரமாக நடக்கத் தொடங்கியுள்ளன. இதில் புதிதாக நாகேசும், தங்கவேலுவும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகமேடை

# தேமதுர தமிழோசை

கோலாலம்பூரில் கோலாகலமாக நடைபெற்ற தமிழ்த் திருவிழா சர்வதேச முத்திரையுடன் இனிதே முடிவடைந்தது. அடுத்த திருவிழா தமிழ் நாட்டின் தலைநகர் சென்னைப் பட்டணத்தில் நடைபெறும் நாளை, தமிழ் மொழி அபிமானிகள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

சமஸ்கிருதம், ஹீப்ரு, லத்தீன், தமிழ் ஆகியன ஆதிமொழிகள். இவற்றின் காலவரையறை பல்லாயிரம் ஆண்டுகள் கொண்டது. தமிழைத்தவிர முன்னைய மொழிகளின் பெருமையும், அந்தஸ்தும் சர்வதேச ரீதியில் ஏற்கனவே சரியான முறையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் தமிழின்பெருமை, அதன் தொன்மை சரித்திர காலத்துக்கும் முற்பட்டதாயினும், நவீன சரித்திராசிரியர்கள் ஆயிரக்கணக்கான வயதுகொண்ட கன்னித்தமிழுக்கு முக்கியத்துவம் தரவில்லை என்பது உண்மை.



தனிநாயகம் அடிகள்

சிந்துவெளி நாகரிகம், திராவிடர்களின் ஆதிச்சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு. ஐரோப்பியப்பாதிரி ஹெரஸ் அந்த உண்மையைப் பரப்பி திராவிடரின், தமிழரின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டினார் என்பதை நாம்மறுக்கமுடியாது. சரித்திர காலத்துக்கு முற்பட்ட ஹரப்பாவும், மொகஞ்சதாரோவும் திராவிடரின் பெருமையை உலகுக்கு இன்னும் எடுத்தோதி வருகின்றன. சிந்துவெளி நாகரிகம் உலகின் ஆதிநாகரிகங்களில் ஒன்று. எகிப்து, பாபிலோனியா, சீனா ஆகிய இடங்களைப்போலவே சிந்துவெளிநாகரிகமும் அவற்றில் ஒன்று.

சிந்துநதிபாயும் பிரதேசத்தில் தமிழ், சிந்துநதி வெள்ளத்துடன் பாய்ந்தது என்பதைத்தான் அங்கு கண்டெடுக்கப்பட்ட புராதன சின்னங்கள் உணர்த்துகின்றன. நைல், யூபிரடீஸ், டைகிரீஸ், ஹோயாங்கோ, யாங்ட்ஸிகியாங், சிந்துநதி ஆகியன ஆதிநாகரிகம் வளர்ந்த நதிக்கரைகளாகும். சரித்திர காலத்துக்கு முற்பட்ட சிந்துநதி நாகரிகத்தின் போது நவீனநகரங்கள் இருந்ததையும், அங்கு தமிழ் எழுத்துக்கள் காணப்பட்டதையும் வைத்தே தமிழின் சரித்திர கால தொன்மையை அறியலாம்.

''தமி'' என்றால் தனிஎன்று அர்த்தம். அதாவது தனித்தே இயங்கும் ஆற்றல் வாய்ந்த மொழி என்று கூறுவார்கள். தமிழ் என்றால் இனிமை. பிறமொழிக் கலப்பின்றி தனித்தே இயங்கும் ஆற்றல் பெற்றது தமிழ் என்பதை ஆசிரியர் சுந்தரம் பிள்ளை தனது மனோன்மணீயத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத்
துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தவாறி ருப்பதுபோல்
கன்னடமும், களி
தெலுங்கும், கவின்மலை
யாளமும், துளுவும்,
உன்னுதரத்து உதித்
தெழுந்தே ஒன்றுபல
ஆயிடினும்
ஆரியம் போல் உலக
வழக்கழிந்து
ஒழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல்
மறந்து வாழ்த்து
வமே''

தமிழ் மங்கை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக கன்னியாகவே இருக்கிறாள். ஆனால் இன்றைய உலக வளர்ச்சியில் அவளுக்குத் திருமணம் செய்யும் பருவம் வந்துவிட்டது. நாலு பேருக்கு மத்தியில் நாமும் தம்பதிகள்தான் என்று காட்ட வேண்டிய அவசியமும் வந்துவிட்டது. பிறமொழிக் கலப்பின்மூலமே தமிழ் ஜனரஞ்சக மொழியாக வளர வாய்ப்புண்டு என்பதை அறிஞர்களும், இதரர்களும் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

ஆங்கில நங்கையைப் பாருங்கள், அவள் எத்தனை பேருடன் கலந்திருக்கிறாள்? எத்தனை மொழிகளைத் தன்னுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறாள்? இந்த சர்வதேச சமரச ஐக்கியம்தான் ஆங்கிலத்தை உலக மொழியாக்கியது. அதுமட்டுமா? பிரெஞ்சு, ஸ்பானிஷ், ருஷ்யா, சீன, ஜெர்மன் மொழிகளே உலக அவையில் உத்தியோக மொழிகளாக பெருங் கௌரவம் பெற்றிருக்கின்றன. ஏன் தொன்மை மொழி தமிழுக்கு இப்பெருமை இல்லை?

தமிழ் தனக்கென்று ஓர் இடத்தைப்பிடித்துக்கொண்டது. உலகம்பலமாறுதல்களுக்கும், புரட்சிகளுக்கும்உட்பட்டபோதிலும் தான்மட்டும் மாறமுடியாதென பிடிவாதம் பிடித்துவந்தது, தமிழ் மொழி. மறைமலையடிகள் போன்றோர் தனித்தமிழ் இயக்கத்தை தீவிரப்படுத்தி வந்தனர். ஆனால் தமிழின் கன்னித்தன்மைக்கு இது உதவிபுரிந்ததெனினும் அதன் சுமுகமான பழக்க வழக்கங்களுக்கு, பிறமொழிச் சொல் கலப்பு அவசியமாகிறது.

இக்காலத்துப் புலவர்கள் மட்டுமின்றி, பண்டைப் பெரும் புலவர்கள் கூட தமிழில் வடமொழிக் கலப்பை உபயோகித்தார்கள். நமது புராதன இலக்கியங்களில் பெருமை பெற்ற இலக்கியங்கள், பெரும்பாலும் வடமொழிக் கலப்பைக் கொண்டவை என்பதை உணர வேண்டும். 'இனி நாம் தேசிய ரீதியில் நிற்க முடியாது என்பதையும், விஞ்ஞான, தொழில் நுட்ப உலகம் வளர வளர தமிழில் பிறமொழிக் கலப்பை அங்கீகரிக்கவேண்டும் என்பதையும் உணரவேண்டும். பிறமொழிக் கலப்பினால் ஆங்கிலம் உட்பட பல ஐரோப்பிய மொழிகள் உலக மொழிகளாயின. அப்படியிருக்க அஸ்திவாரத்தில் பலம் கொண்ட தமிழ் மொழி, ஏன் பிறமொழிக் கலப்பை ஏற்று, உலக மொழியாகக் கூடாது? அதற்கான பூர்வாங்கம்தான் மலேஸிய சர்வதேச தமிழாராய்ச்சி மகாநாடு என்பதை நாம் ஏற்க வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்தே ''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்வேண்டும்'' என்ற பாரதியார் கனவை நனவாக்க வேண்டும். லத்தீன், ஹீப்ரு, சமஸ்கிருதம்போன்ற ஆதிமொழிகள் பற்றி, அல்லது ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரீக், ஸ்பானிஷ், ருஷ்ய, சீனம் போன்ற நவீன மொழிகள் பற்றி ஆராய்ச்சி நடத்த சர்வதேச மகாநாடு எதுவும் சமீப காலத்தில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஒரு வேளை அவை பழைய, புதிய சர்வதேச அங்கீகாரம் பெற்றிருக்கலாம். ஆனால் தமிழ்மொழி, தமிழ் கலாச்சார ஆராய்ச்சிக்கு முதலாவது சர்வதேச மகாநாடு இப்பொழுது நடைபெற்றிருப்பது வரவேற்கத் தக்கது. பாரதியின் கவிதைப்படி தமிழ் மொழியை உலகமெலாம் பரப்புவதாய் இருந்தால் பிற மொழிச் சொற்களை, கலைச்சொற்களை, விஞ்ஞானச் சொற்களை அது கடன்வாங்கவேண்டும். கன்னித்தமிழ் தாலிசூடிய நிலைமை அப்போது ஏற்படுமாயினும், சர்வதேச அந்தஸ்து பெற அது ஓர் ஆரம்பமாக இருக்கும்.

சங்க இலக்கியங்களும், அதற்குப்பின் ஆக்கப்பட்ட பெரும் புலவர்களின் தமிழ் நூல்களும் ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்படவேண்டும். இறவாத புகழுடைய தமிழ் நூல்கள் அவை. ரவீந்திரநாதர் தமது கீதாஞ்சலியை ஆங்கிலத்தில் பெயர்க்காமலிருந்திருந்தால் நோபல் பரிசு கிட்டியிருக்காது.

பாரதியாரின் கவிதைகளை தகுந்த தரமுடையோர் ஆங்கிலத்தில் பெயர்த்தால் அது நவீன காலத்தமிழனின் பெருமையை உலகுக்கு உணர்த்துவதாய் இருக்கும். கோலாலம்பூர் மகாநாட்டிலே அறிஞர்கள் பலர் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டனர். இவை அனைத்தும் அடங்கிய ஆங்கிலத்தொகுப்பும், ஐரோப்பிய மொழிகளின் தொகுப்பும், தமிழ் மொழிபெயர்ப்புத் தொகுப்பும் வெளிவருமானால் அது நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப்பேருதவியாக இருக்கும். தொல்காப்பிய காலத்திலிருந்து பாரதி காலம்வரையிலான தமிழ்ஆராய்ச்சிகள் ஐரோப்பியர்களுக்கு உணர்த்தப்பட வேண்டிய அதே சமயம், தமிழர்களும் தங்கள் பெருமையை உணருவதற்கு வழி செய்யப்படவேண்டும்.

மலேஸிய உலகத் தமிழ் மகாநாட்டை உருவாக்க சேவியர் தனிநாயகமும், இதர பிரபலஸ்தர்களும் ஆற்றிய சேவை இதற்கு ஒரு பூர்வாங்கமாகும்.

தமிழர்களின்கலாச்சாரம், ஹிந்து, பௌத்த, கிறிஸ்தவ கலாச்சாரத்தைப்போல் விரிவானது என்பதையே மலேஸிய மகாநாடு உணர்த்திற்று. மூவேந்தர் காலத்திலும், அசோகன் காலத்திலும் கடல்கடந்த தீவுகளை தமிழர்களும் இந்துக்களும், ஆட்சி செய்திருக்கிறார்கள். தமிழர்கள் போர்த்துக்கேய, டச்சு, பிரெஞ்சு, ஸ்பானிஷ், பிரிட்டிஷ்காரர்களைப் போல் ஏகாதிபத்திய விஸ்தரிப்பை தாங்கள் குடியேறிய நாடுகளில் ஏற்படுத்தவில்லை. பதிலாக, தெய்வ வணக்கங்களையும், கலாச்சாரத்தையும், பழக்கவழக்கங்களையும் அவர்கள் ஆசிய நாடுகளில் புகுத்தினார்கள்.

வடஇந்தியாவில்ஏற்பட்ட பௌத்த மதம்எப்படி இதர கீழ் நாடுகளுக்குப் பரவினதோ, அதே வேகத்தில் ஆனால் அதற்குமுன்பேதமிழ் கலாச்சாரம் ஆசிய நாடுகளில் பரவியது என்பதற்கு சரித்திர ஆராய்ச்சியுண்டு. எத்தனையோ ஐரோப்பிய அறிஞர்கள் தமிழில் ஈடுபாடு கொண்டு அதில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். போப்ஐயரின் தேம்பாவணி இதில் தலையாய உதாரணம். தங்கள் மதக்கொள்கைகளைப் பரப்பவந்தவர்களையெல்லாம், ஹிந்துமதமும், தமிழ் மொழியும் கவர்ந்தது என்ற விஷயம் ஒன்றே நமது மொழியின் சிறப்பை எடுத்துக்காட்ட போதிய உதாரணமாகும்.

ஆனால் இதுவரை தமிழின் பெருமையைப்பற்றி தமிழர்களே தங்களுக்குள் கூறிவந்தார்கள். பிறருக்கு எடுத்துச் சொல்லவில்லை. அப்படிச் சொன்னாலும் பிறருக்கு அது செவியில் ஏறாது என்பதையும் எவரும் அறியவில்லை.

எனினும் மலேஸிய மகாநாடு இதை உத்தியோக ரீதியில் எல்லோருக்கும் அறிவிக்க வாய்ப்பு அளித்ததை யிட்டு, மலேஸிய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

'வாழ்க தமிழ்மொழி,
வாழ்க நற்றமிழர்'
— பாரதி

# இலக்கியத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தையும் உடையேம்
எம் குன்றும் பிறர்
கொளார்
இற்றைத்திங்கள் இவ்
வெண் நிலவில்
வென்று எறி முரசின்
வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம்
எந்தையும் இலமே
(புறம் 112)

என்று பாரி மகளிர் பாடிய கையறு நிலைப்பாடலை உன்னுந்தோறும் இதயம் வேதனைக்குள்ளாகின்றது.

பாரிஇறந்தபோது அவனது செல்வப் புதல்விகளாம் அங்கவை, சங்கவை ஆகிய இரு மகளிரையும் திருமணம் செய்துவைக்கவேண்டிய பெரும் பொறுப்பு கபிலருக்கு ஏற்பட்டது. பாரி வாழ்ந்த பறம்பு மலையை விட்டு அப்புலவர் பெருமான் பிரிய நேர்ந்தபொழுது,

''பறம்பே! உனது வன்னமையை எவ்வாறுபுகழ்வேன்? நல்ல மதுவைத்தருவார் சிலர்; ஆட்டுக்கடாவை வெட்டிச் சமைத்து ஊனுஞ் சோறுமளிப்பார் சிலர்; இத்தகைய பெருவளத்துடன் விளங்கினாயே; அப்போது உனக்கு உற்றவனானேன். ஐயகோ! இன்றோ பாரி வீழ்ந்தனன். அவனது உயிரனைய மகளிருக்கு மணஞ் செய்தலை விழைந்து நான் செல்கின்றேன். எனதருமைப்பறம்பே விழிநீர் பெருக, நெஞ்சங் கலங்கி, செயலிழந்தவனாக உன்னை வாழ்த்தி வணங்கிச் செல்கிறேன்'' என்ற கருத்தமைய,

மட்டுவாய் திறப்பவும்
மைவிடை வீழ்ப்பவும்
அட்டு ஆன்று ஆனாக்
கொழுந்துவை ஊன்
சோறும்
பெட்டாங்கு ஈயும் பெரு
வளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே
இனிய
பாரி மாய்ந்தெனக் கலங்
கிக் கையற்று
நீர் வார் கண்ணேம்
தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்
பெயர்ப் பறம்பே
கோள் திரள் முன்கைக்
குறுந்தொடி மகளிர்
நாறு இருங்கூந்தற் கிழவ
ரைப் படர்ந்தே
(புற113)

என்ற கபிலர் பாடலைப் படிக்கும் தொறுங் கவலைக் கடலில் ஆழ்கிறோம்.

நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவனாகிய நந்திவர்ம பல்லவன் இறந்துவிட்டான். வள்ளன்மை மிக்க அம்மன்னன் மாண்டொழிந்தமை புலவர் பெருமக்களுக்குப் பேரிழப்பாக இருந்தது. அவர்களுள் ஆற்றொணாத் துயரமுற்ற ஒரு புலவரின் குரல் இதோ ஒலிக்கிறது!

வானுறு மதியை அடைந்த
துன் வதனம்
மறிகடல் புகுந்ததுன்
கீர்த்தி
கானுறு புலியை அடைந்
ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன்
கரங்கள்
தேனுறு மலராள் அரியி
டம் புகுந்தாள்
செந்தழல் அடைந்த
துன் தேகம்
நானும் என்கலியும் எவ்
விடம் புகுவோம்
நந்தியே நந்தயாபரனே

இவ்விலக்கியக் 'கையறு நிலை'ப்பாடல்களிலே நாமோருண்மையை அறியக்கூடியதாக இருக்கின்றது. அதாவது, இக்காலச்சரமகவி அல்லது இரங்கற் பாக்களில் காணப்படுகின்ற பொய், புனைசுருட்டு, ஆதியனவும்; இரங்கற்பாவுக்குரியவரின் சிறப்புக்கள் குறைவாகவும், அவர் சுற்றத்தவரின் நிறைவுகள் அதிகமாகவும் பேசப்படுகின்ற பித்தலாட்டங்கள் முதலியனவும், அக்காலக் கையறு நிலைப்பாடல்களிலே காணமுடியாதனவாக இருக்கின்றன.

சரமகவிஅல்லது இரங்கற் பாக்கள் பாடுகின்றவர்கள் பண்டைய 'கையறு நிலை'ப் பாடல்களைஒருமுறைகூர்ந்து நோக்கிஉண்மை தெளிவார்களாக.

## காயங்களை ஆற்றும் புதுமைப் பசை!

காயங்களின்மீது தையல் போட்டால் இறுதிவரை வடுமறையாமல் இருக்கும். காயங்களின்மீது தடவக் கூடிய புதுமையான பசை ஒன்றை உதாம்பர்க் மருத்துவ நிபுணர் மாக்ஸ் கிபல் கண்டுபிடித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயனச் சிரிப்பு

— சி. சுதந்திரராஜா —

இரசாயன ஆய்வுக் கூடத்திலே மாணவர்கள் தாமே பரிசோதனைகள் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். ஆசிரியர் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ மிக்க சுவாரஸ்யமான புத்தகமொன்றிலே மூழ்கியிருந்தார். அசட்டு மாணவர்களான ராமுவும், சோமுவும் எப்படியாயினும் ஒரு வேடிக்கையான பரிசோதனையால் எல்லோரது கவனத்தையும் தமது பக்கம் திருப்பவேண்டுமென நினைத்தார்கள். சில நிமிடங்கள் தீவிரமாகச் சிந்தனை செய்த பின்னர், ராமு மெதுவாகச் சென்று, ஒரு குடுவை, தேன் கூட்டு மேடை, நீர்த்தொட்டி, வெப்பமானி, ஏழு எட்டு வாயுச் சட்டிகள் முதலியவற்றை எவருமறியாமல் எடுத்துவந்தான். சோமு சுற்றுமுற்றும் பார்த்தான். எவருமே அவனைப் பார்க்கவில்லை. படபடவென அலுமாரியிலுள்ள அமோனியம் நைற்றேற்று கட்டிகளைக் கொண்ட போத்தலை எடுத்துத் திறந்தான். அதனுள்ளிருந்த கட்டிகளைக் குடுவைக்குள் போட்டான்.

ராமு குடுவையையும், நீர்த்தொட்டியிலிருக்கும் தேன்-கூட்டு மேடையையும் போக்குக்குழாய் கொண்டு இணைத்துவிட்டு வாயுச்சாடிகளனைத்தையும் நீரினுல் நிரப்பிவிட்டு, ஒரு வாயுச் சாடியை மேடையின்மேல் வைத்தான். இதற்கிடையே சோமு அக்கம் பக்கத்திலிருந்த பன்சன் அடுப்புக்களைப் பற்றவைத்துவிட்டான். இருவருக்குமிடையே மௌனம். பத்துப் பதினைந்து நிமிடங்கள் பறந்தோடின. வாயுச் சாடியுள் குமிழிகள் தோன்றலாயின. தண்ணீர் மெதுவாகக் குறைந்துகொண்டேவந்தது. ராமு ஆக்கிமிடீசைப் போன்று, ''இயூகா! இயூகா!!'' என்று கத்த ஆரம்பித்தான். ஆனுல் சோமு உடனே தந்திரமாக அவனது வாயைப் பொத்திக்கொண்டான். முன்னதைப் போலவே இருவரும் ஒருவாறு சாடிகளனைத்திலும் அவ்வாயுவை நிரப்பிவிட்டார்கள்.

ஏதோ பெரிய சாதனையைச் சாதித்துவிட்ட பெருமிதத்துடன் வாயுச்சாடியை நுகர்ந்தான். மறு விநாடி வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்தான். அமைதியின் நடுவே திடீரென ''ஹஹ்ஹா......'' என விழுந்து விழுந்து சிரிப்பதை இப்போதுதான் தமது பரிசோதனைகளில் லயித்திருந்த இதர மாணவர்களின் கண்கள் நோக்கின. ஏதோ பைத்தியமாக்கிவிட்டதாக நினைத்தனர். ராமு 'திட்டம்' பலித்துவிட்டதை எண்ணிப் பூரிப்படைந்து வாயுச் சாடிகளிலுள்ள வாயுவை சக மாணவர்களனைவரையும் நுகரும்படி செய்தான். அத்தனை மாணவர்களும் விழுந்து விழுந்து உரக்கச் சப்தமிட்டுப் பலமாகச் சிரித்தார்கள். கோபமுற்ற ஆசிரியர் பல்லைக் கடித்துக்கொண்டே ''என்ன உங்களைப் பரிசோதனைகள் செய்யச் சொன்னேனு, பலமாகப் பல்லிளிக்கச் சொன்னேனு'' என்று கேட்டார். சோமு, ''இதன் வேலைதான் சேர்!'' என்று வாயுச் சாடியினை நுகரக் கொடுத்தான். என்ன விந்தை! கோபத்து

(VIIம் பக்கம் பார்க்க)

## விந்தையான விபரங்கள்

○ ஆடு, மாடு, ஒட்டகம், குதிரை, எருமை, இயக், ஸீபு, செம்மறி, லாமா என்னும் மிருகங்களிலிருந்து பெறப்படும் பாலை மனிதர்கள் அருந்துகிருர்கள்

○ உலகில் 20,000 விதமான பறவைகளும், 20,000 விதமான பாம்புகளும் உள.

○ சராசரியான ஒரு மோட்டார் வண்டியில் 15,000 உறுப்புகள் உள.

○ உலகில், வழக்கிலுள்ள மொழிகள் கிட்டத்தட்ட 3,000 ஆகும்.

○ ஒரு சாதாரண பென்சிலால் தொடர்ச்சியாக 35 மைல் நீளமான ஒரு நேர்கோடு வரைய முடியும்.

○ ஒரு சிறிய இனக்குருவி ஒரு வருடத்தில் குறைந்தது ஏழு ருத்தல் தானிய வகையையே உண்ணும்.

○ அவுஸ்திரேலியாவிலுள்ள கோலா என்னும் பிராணி ஒருபொழுதும் நீர் அருந்துவதில்லை. இலைவகையே இதன் உணவாகும்.

தொகுப்பு:
கந்த. ரவிச்சந்திரன்,
சாவகச்சேரி




## எறும்புகள் ஊர்வலம்

— செ. மகேந்திரன் —

ஊர்வலமாம் பெரும் ஊர்வலமாம்: விரைந்(து)
ஓடி நடந்திடும் ஊர்வலமாம்
யார் வரவை எதிர் நோக்கினரோ?-வழி
யாவும் நெருங்கிய ஊர்வலமாம்.

மன்னவன் வீட்டிற் திருமணமோ?-வீர
மைந்தன் பிறந்திட்ட நற்தினமோ?
என்ன புதுமை நடந்ததுவோ?-அவை
ஏனோ திரண்டணி போகுதடா?

நாட்டிற் பகைவரின் காலடியோ?-அதை
நசித்துக் கலைத்திடப் போரணியோ?
வாட்டும் கவலைகள் ஓட்டிடவே; - மன்னன்
வாசலில் ஆர்ப்பாட்ட ஊர்வலமோ?

ஏதுக் கிவைதொடர்ந் தூர்வலமாம்-இவை
எங்கே விரைகிற தென்றறியோம்.
வீதியில் வீழ்ந்த சிறு இனிப்பு-அதை
விரும்பிச் சுவைத்திட ஊர்வலமாம்!

ஊர்வலமாம் நல்ல ஊர்வலமாம்-மிக
ஊக்கம் நிரம்பிய ஊர்வலமாம்.
பார்க்கப் பரவசம் ஊறிடுமாம்-சிறு
பாதையிலே எறும் பூர்வலமாம்.

## சோறு

— ச. வே. பஞ்சாட்சரம் —

தாய் வயிற்றைக் கஞ்சி யாகித்
தாங்கும் நல்ல சோறு
நாய் வயிற்றில் எச்சி யாகி
நன்மை செய்யுஞ் சோறு.

இரப்ப வர்கள் பழைய தாக
ஏற்றுத் தின்னுஞ் சோறு
அரைத்துத் தோசை ஆக்கப்படும்
அருமை யான சோறு

பொங்கல் செய்யும் போதில் நாங்கள்
புற்கை என்குஞ் சோறு
இங்கு கிழைத் தேசந் தன்னில்
எவருந் தின்னுஞ் சோறு.

விருந்தில் கறிகள் பலவும் பெற்று
விளங்கும் பந்திச் சோறு
வருந்தி யுழவர் பாடு பட்டு
வழங்கும் அமுதச் சோறு!

# பிரச்னை தீர...?

— புலவர் தமிழ்மாறன் —

ஒரு காலத்தில் (சங்க காலத்தில்) எல்லா உரிமைகளும் பெற்றுவந்த பெண்ணினத்தை, படிக்கக்கூடாது, வீட்டைவிட்டு வெளியே போய்வரக் கூடாது. அவள் பார்த்தால் குற்றம், சிரித்தால் குற்றம் என்றெல்லாம் ஆணினம் விதிகளை ஏற்படுத்தி வீட்டுக்குள் போட்டு பூட்டி வைத்தது உண்மைதான். ஆனுல் இப்பொழுது அந்த இனம் ஒட்டகத்திற்கு இடம் கொடுத்த பாகன் போல் பெண்ணினத்திற்கு எல்லா உரிமைகளையும் கொடுத்துவிட்டு நொந்து போயிருக்கிறது. அந்தஇனத்தை பாரதியையும் அவருடைய புதுமைப் பெண்ணையும் அழைத்து வந்து மேலும் நோகச் செய்வது. அருள்வழி வந்த பெண்களுக்கு அழகல்ல.

இனி உத்தியோகம் பார்க்கும் பெண்களைக் கற்பிழந்தவர்கள் தமிழ் பண்பாட்டை

### கருத்தரங்கம்

இழந்தவர்கள், அச்சம், மடம் நாணமற்றவர்கள் என்று கூறி இகழ்வது முறையல்ல. உத்தியோகம் பார்க்கும் பெண்கள் கற்புள்ளவர்களே அவர்களிடமும் தீமையைக் கண்டு அஞ்சும் அச்சமும் அதைக்கண்டு நாணும் நாணமும் இருக்கின்றனவே.

எனவே பெண்கள் உத்தியோகம் பார்க்கலாம். எவ்




வித தப்புமில்லை. அதற்காக பூரணி சொல்வது போல் எல்லாப் பெண்களும் உத்தியோகம் பார்க்கவேண்டுமா? 'அம்மாவும் உத்தியோகம் தான், அப்பாவும் 500ரூபா எடுக்கிருர் தான் - இருந்தும் வீட்டிலையிருக்கப் பொழுது போகுதில்லையே' என்று கூறிக்கொண்டு பொழுது போக்கிற்காக உத்தியோகம் பார்க்கும்செல்வப்பெண்கள் எத்தனைபேர்? உண்மையிலே இவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பது போன்ற அநியாயமான செயல் வேறெதுவுமில்லை. இவர்களுக்குக் கொடுக்கும் உத்தியோகங் [illegible] தாயையும், தங்கை தம்பிகளையும் காப்பாற்றுவதற்கு வழியில்லாமல் தவிக்கும் ஏழைப் பெண்களுக்குக் கொடுக்கலாமே! இதை எவரும் மறுக்கமுடியாதே. இனி எத்தனையோ பெண்கள் சீதனத்திற்காக உழைக்கிருேம் என்கிருர்கள். ஆணுலகம் சீதனத்தை விடுத்து ஏழைப்பெண்களை மணஞ்செய்யும் பட்சத்தில் இந்த நியாயமும் வலியற்றுப் போகும்.

இனிப் பாரதப்பிரதமர் இந்திராவை உதாரணம் காட்டிக் கொண்டு உத்திகம் பார்க்கும் குடும்பப் பெண்களிடம் வருவோம். அவர்களுடைய நிலை இரு தோணியில் கால்வைத்தவன் நிலை அல்லது இரண்டு குடும்பக்காரன் நிலை என்ருல் மிகையல்ல. அவர்களால் இரு கடமைகளையும் சரிவரச் செய்யமுடியாது. விடிவெள்ளி முளைக்கும் நேரத்தில் எழுந்து வீடுவாசல் முற்றமெல்லாம் கூட்டி உறக்கத்திலிருக்கும் கணவனையும் குழந்தைகளையும் எழுப்பி காலையிலே செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் அவர்கள் செய்வதற்கு உதவிசெய்து சிற்றுண்டியும் கொடுத்து அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கும் அலுவலகத்திற்கும் அனுப்புவதும் மாலையிலே அவர்கள் வந்தவுடன் அகமும் முகமும் மலர உபசரிப்பதும், இனி அவர்களை உறங்கவைத்துத் தாம் உறங்குவதும் இன்னும் இது போன்ற பிற இல்லறக் கடமைகளைச் செய்வதும் உத்தியோகப் பெண்களால் இயலாதகாரியங்கள். இவைகளைச் சரிவரச் செய்யும் பெண்களால் நிச்சயம் உத்தியோகக் கடமைகளை நிம்மதியாகச் செய்யமுடியாது. எத்தனையோ உத்தியோகம் பார்க்கும் பெண்கள் இல்லறத்தில் நுழைந்ததும் தாமாகவே தமது உத்தியோகங்களை இராஜினுமாச் செய்வதே இதற்குச்சான்று. இந்தியப் பிரதமர் இந்திராவுக்கோ அல்லது நமது மாஜிப்பிரதமர் ஸ்ரீமாவோ அம்மாவுக்கோ இந்தப் பிரச்னைகள் இல்லை அவர்களுக்கு முக்கியமாகச் சேவை செய்வதற்குக் கணவரில்லை. இனிக் குழந்தைகளும் அவர்களுடைய சேவைகளைப் பயன்படுத்துவதில்லை. (ஏனெனில் வளர்ந்தவர்கள்) எனவே இல்லறக் கடமைகளை மறந்து பொதுச்சேவை செய்யும் இவர்களை இல்ல

(VII-ம் பக்கம் பார்க்க)

திருமணமென்பது 'புத்' என்னும் நரகத்தில் விழாதிருக்க வேண்டி ஒரு பிள்ளை பெறும் கருவிக்கு மாலையிடும் சடங்கல்ல. அது வாழ்க்கைக்கு ஒரு துணையைத் தேடிக்கொள்ளும் உத்தமமான ஒரு நிகழ்ச்சி.

—அறிஞர் அண்ணு

சிந்திய கண்ணீர்
துடைப்பவர் ஆர்?
-பயம்
சிந்தையகன்றிடச் செய்
பவர் ஆர்?
முந்து கவலைகள் பறந்தி
டவே-ஒரு
முத்தம் அளிக்க வருபவர்
ஆர்?

## மலர்ந்த பெண்மை

— ஜீவா-நாவுக்கரசன் —

பெண்மை மலர்ந்தது ஒரு நாளில்
பிறரைக் கவர்ந்தது பல நாளில்,
உள்ளம் நிறைந்தான் ஒரு தலைவன்,
உயிரில் கலந்தான் அவளிறைவன்.

வாழ்வு மலர்ந்தது மூத லிரவில்
வண்ணம் வளர்ந்தது பல இரவில்
தாய்மை அடைந்தாள் தவம் முடித்தாள்!
தூய்மை நிறைந்தாள் துயர் மறந்தாள்!

தன்னை மறந்து பால் ஊட்டும்
தாயின் வடிவாம் அவள் உருவம்
தலைவன் மார்பில் அவள் துயில
தாயின் மடியில் சேய் துயின்றுன்.

தனயன் சிரிப்பில் உயிர் வாழ்ந்து
தமிழில்ப் பாடித் தாலாட்டி
இரவில், பகலில், இமைப் பொழுதில்
இதமாய் மகனைக் காத்து வந்தாள்.

குழந்தை நோயில் தளர்ந்து விட்டால்
குடும்பம், வாழ்க்கை குலைந்து விட்டால்
உயிரைக் கொடுப்பாள், உயர் குடும்ப
உறவை மீண்டும் பெறத் துடிப்பாள்.

தியாகம் நிறைந்த மனமுடையாள்!
தெய்வம் திகழும் குணமுடையாள்!
உடல், பொருளாவி, உரிமை தம்மை
உலகிற் கீயும் உயர் குலத்தாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பலாம் நடந்தது!

"எனது சிநேகிதர்களுக்கெல்லாம் காதலர்கள் இருக்கிறார்கள்; என்னைக் காதலிப்பார் யாருமில்லையே வெளியேபோவதற்கே எனக்கு வெறுப்பாக இருக்கிறது."

—இப்படியாக மூன்று மாதங்களுக்கு முன்னர் அலுத்துச் சொல்லிக் கொண்டிருந்த இங்கிலாந்தைச் சேர்ந்த பத்தொன்பது வயது பெண் மிஸ் ஆன் ரெஸ்டன் இப்போது முன்னர்போல் கவலை விரக்தியெதுவுமின்றி மற்றப் பெண்கள்போல எங்கும் போய் வருகிறாள். அவளுடன் இளைஞர்களும் இப்போது விருப்பிப் பழகுகிறார்கள்!

அவளுக்கு முன்னர் இருந்த குறை ஒன்றே ஒன்றுதான்! அது இப்போது தீர்க்கப்பட்டுவிட்டது!

அவளுடைய உயரம் 6 அடி 7 1/2 அங்குலம்! பொன்னிற கேசமுடைய ஆன் ரெஸ்டன் அழகியாக இருந்தபோதிலும் சாதாரண மனிதர்கள் போலல்லாது உயரத்தில் பெரியவளாக இருந்ததால், இவளுடன் சேர, இவள் கல்லூரித் தோழிகள் வெட்கப்பட்டு ஒதுங்கினர். தம்மைவிட உயரமாக இருக்கிறாளே என்று இளைஞர்கள் ஒதுங்கிச் சென்றனர்

விரக்தியடைந்த இவள் மனம் தளரவில்லை; ரண சிகிச்சை மூலம் தன் கால்களைக் குறைத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் மிட்லாண்டு மருத்துவ மனையில் சேர்ந்தாள்.

தனது உயரத்திலிருந்து 7 1/2 அங்குலத்தைக் குறைத்துக் கொண்டாள்! மிட்லாண்டு மருத்துவமனை டாக்டர்கள் இந்த ரண சிகிச்சைமூலம் புகழ் பெற்றனர்!

மிஸ் ஆன் இப்போது ஸ்கூட்டர் ஒன்று வாங்கியிருக்கிறாள். ஸ்கூட்டரின் பின்னால் ஒரு அழகிய வாலிபன் எந்நேரமும் இருந்துகொண்டிருக்கிறான்! அது அவள் காதலனாம்!

★

நம்மவர்களில் எத்தனையோ பேருக்கு சின்ன வயதிலேயே படிப்பு வெறுத்துப்போய் விடுகிறது! ஆனால் தன் 75 வயதிலே ஒரு வயோதிபமாது எம். ஏ. பட்டம் பெற்றிருக்கிறாரென்றால், அது ஒரு ஆச்சரியமான செய்திதானே!

அதுவும் பி. ஏ. பட்டம் பெற்ற 56 ஆண்டுகளுக்குப் பிறகு, திருமதி எடித் விட்பிரேட் ஷெல்பீல்ட் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ளார்! திருமதி விட்பிரெய்ட் 1909-ல் பி. ஏ. பட்டம் பெற்றார். பிறகு சில ஆண்டுகள் அவர் தொடர்ந்து படித்தார். 1922-ல் அவர் இந்தியாவில் பணியாற்றிய பாதிரியாரைத் திருமணம் செய்துகொண்டார்.

### ஒரே முட்டையில் 2 கோழிக் குஞ்சுகள்!

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகேயுள்ள கோட்டைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இராணுவவீரர் திரு. மாரியப்பனுக்குச் சொந்தமான கோழிப்பண்ணையில் ஒரு கோழி முட்டையிட்டு குஞ்சு பொரித்தபோது, ஒரே முட்டையில் இரண்டு கோழிக்குஞ்சுகள் இருந்தன.

--ராஜன்

# 'நவஜீவன'த்தின் அரிய சமூகத்தொண்டு

— எம். எஸ். ஸி. சரவணமுத்து —

பரந்தன் சந்தியிலிருந்து 2-வது மைல் போஸ்டில் முரசுமோட்டை— தருமபுரம் -முல்லைத்தீவு ரோட்டில் "இளைஞர் நகர் நிறுவனம்" என்னும் ஸ்தாபனத்தை அண்மையில் வடமாகாண அதிபர் திரு. வேணன் அபயசேகரா திறந்துவைத்தார்.

இந்த நிறுவனம் முரசுமோட்டையில் உள்ள "நவஜீவனம்" ஆச்சிரமத்தின் கிளையாகும். இவ்விரண்டு ஸ்தாபனங்களும் முரசுமோட்டை-கரைச்சிப் பகுதியில் கிறீஸ்தவ வாலிபர் சங்க (வை. எம். சி ஏ.) கிளை ஸ்தாபனங்களாகச் செயலாற்றுவன.



சைக்கிள் வண்டியில் சமூகத்தொண்டு செய்யும் முரசு மோட்டை அம்மையார்' சகோதரி எலிசபெத் பேக்கர்.

நவஜீவனம் 1959-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு கமவேலை, கைப்பணி வேலை, மரவேலை ஆகியபணிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. 6 வயது தொடக்கம் 16 வயதுவரையுள்ள பிள்ளைகளும், வேலையில்லாதவர்களும், வீடுகளில் வசதியில்லாதவர்களும், வறுமையான குடும்பத்திலுள்ளவர்களும், அனாதைப்பிள்ளைகளும்இங்கு அனுமதிக்கப்பட்டு அவரவர்களுக்கேற்ற துறையில் கல்வி போதிக்கப்பட்டுவாழ்க்கைக்குகந்த பயிற்சியளிக்கப் படுகிறார்கள்.

இங்கு பயிற்றப்பட்ட பல வாலிபர்கள் மெக்கானிக்குகளாகவும், சாரதிகளாகவும் தேயிலைத் தோட்டங்களில் பொறுப்பான உத்தியோகத்தர்களாகவும் தொழில்வசதி பெற்றிருக்கிறார்கள் உதாரணமாக நவஜீவனத்திலிருந்து பயிற்றப்பட்ட திரு. றொபேட் டொப்ஸ் என்னும் ஆங்கில இளைஞர் தேயிலைத் தோட்டமொன்றில் உதவி சுப்பிறின்டன்டாகநியமனம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் தமிழ்மொழியில் பெற்றிருக்கும் பயிற்சி பாராட்டுக்குரிய தொன்றாகும். இவ்வேலைகளுக்கெல்லாம் பொறுப்பாயிருப்பவர் வண ஏ. சி. தம்பிராசாவும் சகோதரி எலிசபேத் பேக்கர் அம்மையாருமாவர்.

இந்த ஸ்தாபனத்திற்கு அரசாங்கமும் இளம் குற்றவாளிகளை நன்னடத்தைப் பயிற்சிக் கனுப்புவதுண்டு. முரசுமோட்டை 1-ம், 2-ம், 3-ம் வட்டாரங்களில், சுகாதார வசதிகள், விளையாட்டுப் போட்டிகள். ஆங்கில பாடம் கற்பித்துக்கொடுத்தல் ஆகிய சமூக, கல்விச் சேவைகளை இவர்கள் மேற்கொண்டு தொண்டாற்றி வருகின்றார்கள். இந்த ஸ்தாபனங்களிலிருந்து பலபிள்ளைகள் அண்மையிலுள்ள பள்ளிக் கூடங்களில் கல்விபயிலுகின்றார்கள்.

நிறுவனஸ்தாபக "போதகர் ஐயா" என இப்பகுதியில் எவராலும் கௌரவமாக அழைக்கப்படுவார். இவர் யாழ்ப்பாண அத்தியட்ச ஆதீனத்தில் குருவாகவிருந்து 22 வருடங்களாக இணையற்ற மதசேவை செய்தவர்.

64 வயதான சகோதரி எலிசபெத் பேக்கர் அம்மையார் இலங்கை மெதடிஸ்த சபையில் 30 வருடங்கள் வரையில் வேலை பார்த்து இளைப்பாறியவர். நவஜீவனத்தின் சேவையில் ஈடுபட்டு தாய்நாடான இங்கிலாந்து போவதையும் மறந்து இலங்கையிலேயே தரித்திருக்கத் தீர்மானித்துள்ளார். இவ்வம்மையார் சுறுசுறுப்பும், உற்சாகமும், அயரா உழைப்பும் அணிகலனாகக் கொண்டு கரைச்சிப்பகுதி மக்களுக்கெல்லாம் ஈடிணையற்ற சேவை செய்துவருகிறார். இவ்வம்மையார் சைக்கிள் வண்டியில் இப் பகுதி எங்கும் சென்று அன்பும், பண்பும், மனிதாபிமானமும் பொங்க ஏழைமக்கள் மத்தியில் சிறந்த தொண்டாற்றி ஒருமுன் மாதிரியான வாழ்க்கை நடாத்தி வருகிறார்.

## பிரச்னை தீர..?

(VI-ம் பக்கத் தொடர்ச்சி)

றப் பெண்களுக்கு உதாரணங் காட்டுவது அர்த்தமற்ற செயலாகும்.

எனவே இதுகாறும் இப்பிரச்னையை அலசிஆராய்ந்த அளவில் பொழுதுபோக்கிற்காக உத்தியோகம் பார்க்கும் பணக்காரப்பெண்கள் (மணமானவர், மணமாகாதவர்) தமது பொழுது போக்கு உத்தியோகங்களை ஏழைப் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் விட்டுக் கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் உத்தியோகம் பார்க்கும் ஆண்கள் தமக்குக்கிடைக்கவிருக்கும் ஐயாயிரம், பத்தாயிரங்களை, கல்வீடு வளவுகளையெல்லாம் இழந்து ஏழைப் பெண்களைத் திருமணம் செய்ய முன்வர வேண்டும் என்ற முடிவிற்கு வரவேண்டியிருக்கிறது. இந்த முடிவு சரிவரச்செயற்படுமானால் இப்பிரச்னைக்கே இடமில்லை.

[இக்கட்டுரையோடு இக் கருத்தரங்கம் முடிவு பெறுகிறது எனபதைவாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆ-ர்]

## இரசாயனச் சிரிப்பு

(VI-ம் பக்கத் தொடர்ச்சி)

டனே வந்தவர் பக்கென வயிறு குலுங்கச் சிரித்தார்.

அண்டையிலுள்ள வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் ஆய்வுக் கூடத்திற்கு வந்து ராமு-சோமுவின் திருவிளையாடலைக் கண்டு ரசித்தார்கள். வாயுவை நுகர்ந்த பலர் நிலத்திலே விழுந்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். கல்லூரியே அல்லோல கல்லோலப்பட்டது கல்லூரி அதிபர் கிடுகிடுவெனப் பிரம்புங்கையுமாக வந்தார் முதலில் அகப்பட்ட மாணவர்களுக்கு அடித்தும்விட்டார். ராமு உடனே ஓடிப்போய் வாயுச் சாடியினை அவர் மூக்குக்கு நேரே பிடித்தான் மறுகணம் பல்லனைத்தும் தெரியும்வண்ணம் எல்லோருடனும் சேர்ந்து தானும் சிரித்தார். ராமு, சோமுவிடம், "எப்படியடா நமது சிறிய மூளை செய்த பெரிய வேலை! நைற்றஸ் ஒக்சைட் நமது கல்லூரியினையே அமர்க்களப்படுத்தி விட்டதே" என்றான்.

## ஒரு சணம்....

'இன்றைக்காவது காலையில் நல்ல ஒரு சாப்பாடு சாப்பிடலாம்.' காய்ந்திருந்த வயிற்றைச் சுற்றும் எழுந்தது ஒரு கற்பனை.

அங்குமிங்கும் பார்க்கிறேன். யாருமேஇல்லை. ஏதோ ஒரு சகுனம்நல்லதாக இருந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த வீதியால் வருவேனா?

எனக்குக்கூட இப்படி ஒரு அதிர்ஷ்டமா? முழுசாக நூறு ரூபாய்- ஒற்றை நோட்டாக ஒன்றல்! 'திருடவில்லை. தெருவில் கிடந்ததுதானே.' எனக்குள் ஒரு சமாதானம்.

தெருவில் கிடந்தெடுத்த அந்த பேர்ஸை மீண்டும் ஒருமுறை பார்க்கிறேன். பலரது கைபடாத நூறு ரூபாய் நோட்டையும் மீண்டும் பார்க்கிறேன். வெளியிலிருந்த அந்த நோட்டை பேர்சுக்குள்ளேயே மீண்டும் நுழைத்தேன். எனக்கே சந்தேகம் அதை எங்கேயாவது போட்டுவிடுவேனோ என்று. அதனால் பேர்ஸை மடித்து மடிக்குள் செருகிக்கொண்டேன்.

மனைவி ஏதேதோ வாங்கி வரச்சொன்னாளே. இன்னமும் நின்றால் வாங்கிவர வேண்டிய பொருள்களின் பட்டியலை நீட்டுவாளே என்று அவசர அலுவலாக வெளியே வந்தவனைப்போல் வீட்டைவிட்டு வெளியேவந்தநான், இப்பொழுது ஆறுதலாக நினைவை மீட்கிறேன். சாதாரணமத்தியான உணவுக்குத்தேவையான பொருள்கள்தாம் அவை. இன்னும் சிறிது தூரம் நடந்தால் நல்ல உணவுப்பொருள்கள் வாங்கக்கூடிய சந்தை. அவளது கோரிக்கையை இன்றைக்காவது மொத்தமாக நிறைவேற்றக்கூடியவாய்ப்பு ஏற்பட்டதே என்று நினைவில் ஓர் ஆறுதல். ஒரு பெருமிதம். 'அப்பா' என் மகனின் குரல் மெல்லக் கேட்கிறது. கடையில் ... கடபோது தனக்கு ... வெல்லாம் ... கேட்டானே 'சொக்லேட்டு' 'சொக்காய்' இன்னும்ஏதேதோ, மறந்துபோய்விடவேண்டுமென எண்ணியிருந்தநான் அவன்தேவைப் பட்டியலை வில்லங்கமாக ஞாபகப்படுத்திக் கொண்டேன். ஆடும் மரக்குதிரை தூரத்துக்கடையொன்றில் தெரிந்தது. அதில் அவன்

-க. கணேசலிங்கம்-

ஆடினால்? மனக்கண்ணில் அவன்வேகமாகஆடும்காட்சி வேகமாகத்தோன்றி மறைகிறது. கண்கள் கலங்குகின்றன-மகிழ்ச்சிப் பிரவாகத்தினாலா? கண்களைச் சட்டையினால் துடைத்துக்கொள்கிறேன். திருஷ்டி என் சட்டைக்கு மாறுகிறது. இந்த சட்டை—எப்பவோ டெயிலரால் தைக்கப்பட்டு அதன் பின்பலமுறை என் மனைவியால்தைக்கப்பட்டது. 'புதுச் சட்டை?' சிறுபிள்ளையைப் போல் ஓர் ஆசை எனக்குள் வளர்ந்தது. என்னையறியாமலே ஒரு மென்சிரிப்பு.

ஒழுங்காகக் குளித்து எத்தனை நாட்கள். நல்ல வாசனைச் சவர்க்காரம் ஒன்று வாங்கி இன்று ஆனந்தமாக நீராடவேண்டும்...... சிந்தனையின் வேகம் நடையை முடுக்கியது.

'ஐயா, ஐயா' எங்கிருந்தோ ஒரு குரல். 'யாரது?' குழப்பமுற்றுத் திரும்பிப் பார்க்கின்றேன். முன்பின் தெரியாதவர்—தெரிந்த முகமாக இருக்கிறதே. கிட்டவந்துவிட்டார். 'என் பேர்ஸைக் கண்டீர்களா? இவ்வழியே தான் வந்தேன். வீடுபோய்ப் பார்த்தபோதுதான் காணவில்லையென்று தெரியவந்தது. என் போட்டோ அதிலிருக்கிறது.'

பெயர் விபரத்தையும் சொன்னார்.

சிறிது நேரமௌனம் இருவருக்கிடையிலும் நிலவுகிறது.

பேர்ஸை எடுத்துத்திறந்து படத்தையும் அவரது முகத்தையும் பார்க்கிறேன். அவர் கூறிய பெயர்கூட அதில் எழுதப்பட்டிருக்கிறது. என் முகத்தில் களைப்பானசிரிப்பு. அவர் முகத்தில் சிரிப்புக்களை பெறுகிறது.

'இந்தாருங்கள்' பேர்ஸ் என்கையிலிருந்து அவர் கைக்கு சேர்கிறது.

'நன்றி, நிரம்ப நன்றி' அவரிடமிருந்து வந்த அந்த வார்த்தைகள் எனக்கு மெதுவாகக் கேட்கிறது.

## குறள் விளக்கம்

19-4-66 வாரமலரில் 7-ம் பக்கத்தில் வெளியான 'குறள் விளக்கம்-உடையார் முன் இல்லார்' என்ற கட்டுரையையெழுதியவரின் பெயர் பொ. சண்முகநாதன் என்றிருக்கவேண்டும். கட்டுரையாளரின் பெயர் தவறுதலாக விடுபட்டுப்போயது.

## வரப்பெற்றோம்

எங்கள்தலைவர்: (திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரச்சுருக்கம்) வெளியிட்டோர்: அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ்-சாவகச்சேரிக்கிளை. பக்கம்: 16. விலை சதம்: 50.

## 'இறுக்கடா பிட்டிசம்'

(V-ம் பக்கத் தொடர்ச்சி)

தட்டில் 'லோங்ஸு'டன் நிற்கும் கண்டக்டரையும் அவர் வர்ணிக்கும்முறை குறிப்பிடத்தக்கது. மற்றும் நடிகர்களும் தமது பாகங்களை உணர்ந்து நடித்துள்ளார்கள்.

சில குறைபாடுகள் இருந்தாலும் 'இறுக்கடா பிட்டிசம்' நல்ல நகைச்சுவை நாடகம் என்பதை ஏற்றுக் கொள்ளலாம்.

### மற்றுமிரு நாடகங்கள்

நடிகமணி வி. வி. வைரமுத்து கோஷ்டியினரின் 'நந்தனார்' நாடகத்தில் வைரமுத்து 'நந்தனா'கவும், கரவை நற்குணம் அந்தணராகவும் கனகச்சிதமாக நடித்தனர் வைரமுத்து கோஷ்டியினரின் மற்றொரு நாடகமான 'அரிச்சந்திர மயான காண்டமும்' இதே மேடையில் அன்று இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

— வாமா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்

எழுதுவது
சோதிட ஆசான் செ. தெல்லியூர்

[27-4-66 3-5-66]

### மேட இராசி

நண்பர்களால் உதவி கிட்டல், தேகநலக்குறைவு, பலவித சிந்தனைகளாலும் மன யகலம், சண்டைசச்சரவு களும் அபிப்பிராய பேதமும் ஏற்படல். முயற்சிகளில் தடைகள்- பின்னடைவுகள், கஷ்டமான பிரயாணங்கள் செய்தல், நட்டம்காணல், இனபந்துக்களினிருந்து பிரிவினை, எதிரிகள் தொல்லை, கல்வித்தடை, உத்தியோகக் குழப்பம்

### இடப இராசி

முயற்சிகளில் வெற்றி, நல்லாரோக்கியம், இலாபம்பல வழிகளில் கிட்டல், சந்தோஷம், கௌரவம், புதிய நண்பர்கள் ஏற்படல், நல்லந்தஸ்த்தில் இருத்தல், எதிரிகள் வீழ்ச்சி, செல்வாக்கு அதிகரிப்பு, மனத்தில் ஒருவித பயம் காணல், உத்தியோகச் சிறப்பு, கல்வி மத்திமபலன்.

### மிதுன இராசி

தொழிற்சிறப்பு, எதிரிகள் வீழ்ச்சி, சுபகருமகொண்டாட்டங்கள் நடத்தல், கல்விச் சிறப்பு, புதிய முயற்சிகளில் ஈடுபாடு, இடையிடை முயற்சித்தடை, கஷ்டபிரயாணம், சச்சரவுகள்- அபிப்பிராய பேதங்கள் காணல், உத்தியோகச்சிறப்பு.

### கடக இராசி

முன்னையிலும் நற்பலன்கள் அதிகமாகக் காணல், தொழில் மேன்மை, சந்தோஷநிலை, நல்ல நண்பர் சேர்க்கை, சுபகருமகொண்டாட்டங்கள், கல்வி மேன்மை, வித்தைமதிப்புப் பெறல், கீர்த்தி, அதிக செலவு, வம்பு வழக்குகள் ஏற்படல், உத்தியோகத்தருக்கு மத்திமபலன்.

### சிங்க இராசி

பொதுவாக சுகவாழ்வு, தொழில்களில் வெற்றி, தேக நலக்குறைவு, இனபந்துக்கள்-ஊழியர் தொல்லை, அபிப்பிராய பேதம், சிறிய பொருள் நட்டம், சிறிய விபத்துக்கள் நேரல், கஷ்ட பிரயாணம்செய்தல், பலவித துறைகளில் மனச்சஞ்சலம், மேல்அதிகாரிகள் வெறுப்பு, வர்த்தகமந்தம், கல்வியில் தடை

### கன்னி இராசி

மனத்தில் சஞ்சலம், பண நெருக்கடி, சிறிய நட்டங்கள் காணல், இனபந்துக்களிடை சச்சரவு, குடும்பத்தில் அபிப்பிராய பேதம், தேகநலக்குறைவு, அலைச்சல், சிறிய காயங்கள் ஏற்படல், முயற்சிகளில் தடைகள் காணல், விரும்பத்தகாத மாற்றங்கள் நிகழ்தல், மேல் அதிகாரிகள் வெறுப்புக்காளாதல், மதிப்புக் குறைதல்.

### துலா இராசி

பொருள்வரவு, தேகநலம் குடும்பத்தில் சந்தோஷம் நிலவுதல், சுபகருமக்கொண்டாட்டம் நடத்தல், சுற்றத்தார் வருகை, நண்பர்-ஊழியர் உதவிகிட்டல், மதிப்பதிகரித்தல், வர்த்தகச்செழிப்பு உத்தியோகச்சிறப்பு, கல்வி மேன்மை, பெண்களுக்கு விசேடநற்பலன்கள்காணல்.

### விருச்சிகஇராசி

முயற்சிகளில் வெற்றி, தேகாரோக்கியச் சிறப்பு, எதிரிகள் வீழ்ச்சி, வருவாய் அதிகரிப்பு, நற்செய்திகேட்டல், சுபகருமக்கொண்டாட்டங்கள், இடையிடை மனச்சஞ்சலம், அதிக செலவு, கஷ்டமான பிரயாணங்கள், அபிப்பிராயபேதத்தால்இனப்பகை உண்டாதல், எதிரிகளால் தொல்லை, உத்தியோக மேன்மை.

### தனு இராசி

பொது செல்வச்செழிப்பு' கல்வி மேன்மை, புதியதுறைகளில் ஆராய்ச்சி செய்தல், எதிரிகள் வீழ்ச்சி, சுபகரும கொண்டாட்டங்கள் காணல், தேக நலக்கேடு, களவு முதலியவற்றால் பொருள் நட்டம், மனச்சஞ்சலம், அபகீர்த்தி, மரணம் முதல் அசுபசெய்திகள்கேட்டல், உத்தியோகத்தில் மத்திம சுகம்.

### மகர இராசி

பொருள் வரவு, சுபகரும கொண்டாட்டம், தொழில் வெற்றி, குடும்பச் சச்சரவு, பயனற்றபிரயாசம், நண்பர்-இனபந்துக்கள் பகைத்தல், உடல் நலிவு, வர்த்தகம் பாதிக்கப்படல், உத்தியோக மத்திமபலன், கல்விச்சிறப்பு, சொத்துக்களால் வருவாய் கிட்டல், பெண்களுக்கு நற்பலன்கள்

### கும்ப இராசி

நண்பர் சேர்க்கை. செல்வாக்குஅதிகரிப்பு,பதவிமாற்றம், அதிகார சம்பத்து, எதிரிகள் வீழ்ச்சி, முயற்சிகளில் வெற்றிகிட்டல், கல்வியில் மேன்மை, கடன்படல், இனபந்துக்கள் சச்சரவு, சுபகரும கொண்டாட்டம், பொருள் ஏமாற்றம், மேலதிகாரிகள் ஆதரவு, கல்வி மத்திம பலன்.

### மீன இராசி

சொத்துச் சேர்க்கை, நல்லோர் உதவி, முயற்சிகளில் தடை, குடும்பத்தில் பகை, எதிரிகளால் தொல்லை, அதிக செலவு காணல், தேகநலக் குறைவு, கஷ்டமான பிரயாணம், பொருட்தொல்லை, உத்தியோகச் சிறப்பு, கல்வியாளருக்கு நன்மைகள், பெண்களுக்கு கலப்பான பலன் நடத்தல், களத்திர மத்திம சுகம்.

# தெரிந்து கொள்ளவும்

என். எஸ். கே.

கறுப்புத்தோல் வெப்ப நாடுகளில் வாழும் மக்களுக்கு நன்மைபுரிகின்றது. அது உடலுக்குத் தீமை உண்டாக்கக்கூடிய சூரியனின் சில ஒளிக்கதிர்களை தடுத்து நிறுத்துகின்றது. ஆகவே வெப்ப நாடுகளில் வாழும் மக்களின் தோல் கறுப்பு அல்லது கபில நிறமாக இருக்கிறது.

✻

100 ருத்தல் எடையுள்ள கடல் நீரில் 3 1/2 இருத்தல் உப்பு இருக்கிறது. கடல் நீரிலிருக்கும் உப்பு பூமியை மூடி 100 அடி படலத்தை உண்டாக்கப் போதுமானது.

✻

ஆஸ்திரேலியாவில் குடியேறிய வெள்ளையர் உணவின் பொருட்டு முயலைக்கொண்டு சென்றனர். சூழ்நிலை அவை பெருகுவதற்கு ஏற்றதாக இருந்தது. அவைகளை வேட்டையாடி அழிக்கும் பகைகள் இருக்கவில்லை. சில ஆண்டுகளில் அவை பீடையாகப் பெருகிவிட்டன. அவற்றை இன்றுவரை ஒழிக்கமுடியவில்லை

அமெரிக்காவில் காணப்படும்நரைநிறஅணில்1890ல் இங்கிலாந்துக்குக் கொண்டு போகப்பட்டது. இது வேகமாகப்பெருகி உள் நாட்டில் வாழ்ந்த அணில்களைஅழித்து விட்டன.

தோட்டங்களில் காணப்படும் நத்தை விக்டோரியா மாகாணத்தை (ஆஸ்திரேலியா) தற்செயலாக அடைந்தது. பிரிட்டிஷ் குடியேற்றக்காரர் அதனை வரவேற்றார்கள், அது விரைவில் பெருகிப் பீடையாக மாறிவிட்டது.

கோர்ஸ் என்னும்ஒருவகைச் செடி வேலிகளுக்குப் பயனுடையதெனக்கருதி நியூசிலாந்துக்குக்கொண்டுபோகப் பட்டது. அது அழிக்க முடியாத அளவுக்கு மலைப்பாகங்களில் பரவிற்று. ஒவ்வொரு ஆண்டும் அது அதிக விசாலமான நிலப்பரப்பிற்பெருகி வருகிறது.

நாகதாளிதென்ஆஸ்திரேலியாவில் இவ்வாறு பெருகுகிறது

✻

தெள்ளுகளில்ஏறக்குறைய 500 வகைகளுண்டு. அவைகளால் தமது உடல் நீளத்தைப்போல் 50 அல்லது 100 மடங்கு தூரத்தைப் பாய முடியும். இஃது ஒரு மனிதன் 140 அடி தூரத்தைப் பாய்வதற்குச் சமமாகும்.

# காகத்துக்குச் சோறிடுவதேன் ?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும். அதற்கு ஒரு முடிவு காணும்வரை ஒரு பெரிய காக்கை 'மகாநாட்டையே ஒருகணப் போதினுள் அங்கு கூட்டிவிடும். வழிதெருவில் எங்காவது ஒரு மனிதன் விழுந்துகிடந்தால் அவனுக்குச் சொந்தமானவர் எவராவது வந்து உதவமுற்படுவர். பிறர் எவராவது விழுந்தவனைக் காணநேர்ந்தால் அவருட்பலர் ''எவனோ ஒருவன் விழுந்துகிடக்கிறான், எமக்கேன் வீண்வம்பு, நாம் ஏன் அதில் போய் வலிய மாட்டிக் கொள்ள வேண்டும்'' என்று நினைத்து ஒதுங்கி விடுவர். வேறு சிலர் வேடிக்கை பார்ப்பர். ஆயிரத்தில் ஒருவனே மனிதாபிமானத்தோடு உதவி புரிய முற்படுவான். இந்த நிலை மாற வேண்டும். இந்தச் சிறந்த பண்பை மனிதன் காகத்தினிடம் கற்றுக் கொள்ளவேண்டும்.

''யாவர்க்கும் ஆம்இறை
வற்கொரு பச்சிலை
யாவர்க்கும் ஆம்பசு
வுக்கொரு வாயுறை
யாவர்க்கும் ஆம்உண்ணும்
போதொரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் ஒரு
இன்னுரை தானே'

என்பது திருமூலநாயனார் கூறிய எளிய திருமந்திரம். சுருங்கச் சொற்களால் பெரும்பயனைத்தருவன மந்திரங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருநாளும் ஐம்பெரு வேள்விகளையும் செய்துவரல் வேண்டும் என ஆன்றோர் பணித்துள்ளனர். ஐம்பெரு வேள்வியாவன;- தேவயக்ஞம், பிரம்மயக்ஞம், பிதுர் யக்ஞம், பூதயக்ஞம், மனுஷ்யயக்ஞம் என்பன. இவ்வைந்தையும் நான்குபிரிவினுள் அடக்கி மிக எளிமையாகக் காட்டியுள்ளார் திருமூலநாயனார். தேவாதிதேவனும் இறைவனைக் குறித்து ஒவ்வொரு நாளும் ஒரு பச்சை இலையும் (வில்வம்-துளசி) நீருங் கொண்டு ஒப்பித்து வணங்குதல் எவராலும் செய்யக்கூடியது என்றும், முனிவர்கடன் (பிரம்மயக்ஞம் வேதம் ஓதுதல்) ஆகவும், பிதுர்கடன் (சிராத்தம்) ஆகவும், பசுவுக்கு ஒரு பிடி புல்லுக் கொடுத்தல் எவராலும் செய்யக்கூடியது என்றும்; பூதயக்ஞமாக- காக்கை வடிவத்தில் இருக்கும் பூதங்களுக்குப் பலியிடுதலாக எவரும் உண்ணும் போது ஒரு கைப்பிடி சோறு இடுவது இயலக்கூடியதுஎன்றும், மனுஷயக்ஞமாக- விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற முப்பாலார் பொருட்டாக எவரும் எப்போதும் இனிய வார்த்தை பேசுதல் இலகுவாக அமையும் என்றும் காட்டியுள்ளார்.

ஆகவே, காக்கைக்குச் சோறிடுதல் பூதயக்ஞம் எனப்படும். அறிந்தோ அறியாமலோ நமது முன்னோர் அனுட்டித்து வந்த செயல்களை காரியகாரண ரீதியில் அவை தவறு என அறிந்து தவிர்க்கப்படும்வரை அவற்றை நாமும் பின்பற்றி வாழ முற்படுதலே அறிவுடைமையான செயலாகும்.

''யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி'' என்ற திருமூலர் அருள் வாக்கு காக்கைக்கு உண விடுதலையே குறிக்கின்றது.

புரட்டாதி மாசத்தில் வரும் சனிவார விரதம் அனுட்டிப்பவர்கள், சனீசுவர பகவானை வழிபாடு செய்த பின் மதிய உணவு உண்பதற்குமுன் காக்கைக்கு உணவிடுதலை இக்காலத்திலும் காணலாம். சனிபகவானுக்கு வாகனம் காகமாதலால் அதற்கு உணவுகொடுத்தல் அப்பகவானது அருளைப் பெற வாய்ப்புடைய செயலாகும்.

''கொடிக்கு இனிதூட்டி
அதிதியரோடிருந்து
உணவுதுப்போர்"

— திருச்செந்தூர்ப் புராணம் கொடி காகம்.

காலகதியடைந்த நமது முன்னோரைக் குறித்துச் செய்யப்படும் சிராத்தச் செயலிலே வாயசபிண்டமிடுதல் சொல்லப்படுகிறது. வாயசம்-காகம். அதற்குரிய மந்திரப் பொருளை ஆராய்ந்து அறிந்தால் காக்கைக்குச் சோறிடுவதற்குரிய நியாயம் நன்கு புலப்படும். அந்த மந்திரம் பின்வருமாறு:-

''யே அக்னி (தக்தா): யே அநக்னிதக்தா: யே வாஜா தார் குலேம,

பூமௌத்தேன பிண்டேன திருப்தா யாந்து பராங் கதிம்.'' என்பது. அதன் பொருள்-என் குலத்திலே பிறந்து இறக்கப் பெற்ற எமது முன்னோர்களில் எவர்கள் தகனக்கிரியைமாத்திரம் [illegible] ளவில் ஏனைய கிரியைகள் முற்றுப் பெறாது விடப்பட்டு அலைந்து வருந்துகின்றார்களோ, எவர்கள் தகனக் கிரியைதானும் செய்யப்படாமல் அவமிருத்தாக அழிந்து கிரியைகளே இன்றி அலைந்துவருந்துகிறார்களோ அவர்கள் யான் பூமியில் இடும் இந்த வாயச பிண்டத்தை ஏற்று மேலான நற்கதியை அடைவராக என்பதேயாம். இப்பொருளைச் சிந்திக்குமிடத்துக் காகத்துக்குச் சோறு இடுவதன் சிறந்தகாரணம் நன்கு தெளிவுப்படுமன்றோ!

# குணரத்தினம் மாஸ்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார், செல்லத்துரையர் என்று மொட்டையாகக் குறித்துக்கொள்ளுவோம். அடிக்கவேண்டிய சமயம் அடித்து, மிரட்டவேண்டிய இடத்தில் மிரட்டி, கெஞ்ச வேண்டிய சமயம் கெஞ்சி, போற்றவேண்டிய இடத்தில் போற்றி, கௌரவமாக நடந்துகொள்ளும் ஆசிரியருக்கே நாங்கள் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தை வழங்குவோம். அவர் 'மாஸ்டர்' என்று பயபக்தியோடு குறிப்பிடப்படுவார்.

நாங்கள் எவ்வளவுதான் பாடத்தில் தவறு செய்தாலும், எவ்வளவுதான் புரளி பண்ணினாலும், எவ்வளவுதான் பொறுமையைச் சோதித்தாலும், சற்றேனும் நிலை பிறழாமல், அடக்கமாக இருந்து, பதிலுக்கு எங்கள் பொறுமையைச் சோதித்து வந்தார் குணரத்தினம் 'மாஸ்டர்' என்று நாங்கள் அழைத்த குணக்குன்று. அவருடைய குரல் முன்வரிசையில் இருப்பவர்களுக்குமட்டுமே கேட்கும். அத்தனை பவ்வியமானது எங்கள் கல்லூரியில் கற்பித்த சுமார் முப்பத்திரண்டு வருடகாலத்தில் பிரம்பு என்பதையே கையில் எடாமல் காலந்தள்ளிய பெருமை அவர் ஒருவரையே சேரும். அசாத்தியமான கோபம் வந்துவிட்டால் கையில் எப்பொழுதும் இருக்கும் சிறிய 'சோக்' கட்டி தவறு செய்தவன்மீது தவறாமல் பாயும். மற்றவர்கள் எல்லோரும் இதைக் கண்டு விழுந்து சிரிக்க 'சட்' டென கோபம் மாறி தாமும் எங்களுடன் சேர்ந்து, கலகலப்பாகச் சிரிக்கும் இனிய சுபாவம் படைத்தவர் குணரத்தினம் 'மாஸ்டர்.'

மற்றைய ஆசிரியர்கள் பாடம் நடத்தும்போது சுட்டு விரலைக் காட்டிவிட்டு வெளியே ஓடுகிறவன் திரும்பிவர குறைந்தது பத்து நிமிடமாவது பிடிக்கும் சில சமயம் பாடம் முடிந்து வேறு ஆசிரியர் வரும்வரை தலை தெரியாமல் நிற்பவர்களும் உண்டு. ஆனால் இவருடைய பாடம் என்றால் ஒருவராவது 'கள்ளம்' பண்ணுவதில்லை. அடிதடி நடவாதென்பது ஒருபுறமிருக்க, அவர் ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொரு மாணவனும் நன்றாகப் புரிந்து கொள்ளும்படி அமைதியான குரலில் பொறுதியாக விளக்கிவைப்பதைக் கேட்கும் பாக்கியத்தை எந்த மாணவன் இழக்க விரும்புவான்?

குணரத்தினம் மாஸ்டரிடம் ஒரே ஒரு கெட்ட வழக்கம் என்னவென்றால் (அது கெட்ட வழக்கமாயின்) மூக்குப்பொடி போடுவது. அவரிடம் சிறந்த முதலாம் நம்பர் பொடி இருக்கும் என்று கல்லூரி முழுவதும் பிரசித்தம். ஆனால் நாம் எவ்வளவு முயன்றும் அவருடைய டப்பியிலிருந்து ஒரு சிட்டிகை பொடியாவது எடுக்கமுடிந்ததில்லை. பையன்கள் பழுதாகிவிடப்படாதென்று அவருக்கு அதிலும் மிகவும் கவனம். வேட்டி மடிப்பில் பொடி டப்பி செருகப்பட்டிருக்கும். வேட்டிக்கு மேலே சட்டை. அடிக்கொருதடவை டப்பியை வெளியே எடுத்து ஒரு 'உறிஞ்சு' உறிஞ்சிவிட்டு உடனே அதை மீண்டும் இடுப்பில் செருகிக்கொள்ளுவார். 'அசோகா' வாத்தியார் 'அசோகா' பாக்கட்டை வெளியே வைத்துவிட்டு எழுந்துபோவதுபோல் இவர் டப்பியைக் கவலையீனமாக வைக்கமாட்டார். பிறர் கண்ணுக்குத் தெரியாமல் சட்டையால் மறைக்கப்பட்டு இடுப்பில் செருகப்பட்டுள்ள ஒரு காவி நிறத் துண்டு மூக்குத் துடைக்க உதவும்

குணரத்தினம் மாஸ்டரிடம் கல்வி கற்றவர்கள் அவரை உயிருள்ளவரை மறக்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org